
தமிழ்த்தொண்டர்

வ.463
௦௦
8.2
SAW. GANESAN
KARAIKUDI. S. I. R.
KMM 0117



மணி பதிப்பகம்
மதுரை

GANESAN Nagappan
KARAIKUDI II FB

தமிழ்த்தொண்டர்

1958

வித்துவான். வீ. ப. நடராஜன்
தமிழாசிரியர்,
(முன்பு போர்டு உயர்நிலைப்பள்ளி, சோழவந்தான்)
தமிழாசிரியர், பசுமலை உயர்நிலைப்பள்ளி, பசுமலை

மணி பதிப்பகம்
புதுமண்டபம்
மதுரை.

ப்புரிமை]

[விலை அணா 14

முதற் பதிப்பு: ... ... 1951.

இரண்டாம் பதிப்பு: ஏப்ரல் 1952.

மூன்றும் பதிப்பு:... ,, 1953.

இ463 / ம/82

Approved by the text book committee
class use for non-detailed study

(Vide Fort St. George Gazette Part I. B
Page 114 Dated 7—5—52.)

அண்ணுமலைப் பல்கலைக்கழகம் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்

உயர்திரு. நாவலர். ச. சோமசுந்தர பாரதி

M. A., B. L. அவர்கள் அளித்த மதிப்புரை.

சோழவந்தான் உயர்தரப் பள்ளித் தமிழாசிரியர் **வித்துவான் வீ. ப. நடராஜன்** அவர்கள் எழுதிய "தமிழ்த் தொண்டர்" மூவர் வரலாற்றைப் படித்தேன். மகிழ்ச்சியும் மதிப்பும் உற்றேன். ஆற்ஞெழுக்கான தமிழ்நடை; இனிமையும் எளிமையும் ஒருங்குடையது. தமிழ்ப்பற்றும் தாய்நாட்டுத் தொண்டும் கடைப்பிடியும் உடைப்பெரியார் சிதம்பரனுர் (1) தமிழ்ப் பற்றும் கடனறி காட்சியும் நிறைந்த கால்டுவெல் அத்தியட்சர் (2) தன்னிகரற்ற தமிழ்ப் புலவர் சண்முகனுர் (3) மூவர் வரலாறுகளும் பலர் அறியா நலங்களை விளக்கி வற்புறுத்தும் முறையில் எழுதப் பெற்றிருப்பது பெரிதும் பாராட்டத்தக்கது. உயர்தரப்பள்ளி மாணவரை அயர்வற ஊக்கி முன்னேறு முயற்சியுடையராக்க மிகப் பொருத்த முடையது. இவ்வாசிரியர் இத்துறையில் இன்னும் பல புத்தகம் எழுதித் தமிழ்த் தொண்டாற்றுவாராக.

பசுமலை
30—12—51

இளசைக்கிழான். நாவலன்
ச. சோமசுந்தர பாரதி.

முகவுரை.

இன்றுள்ள மாணவரிடை தமிழுணர்ச்சி நாளுக்குநாள் வலுவடைந்து வருகிறது. அவ்வுணர்வைப் பெருக்க அவா எழுந்து என்னாலான சிறு தொண்டு செய்வான் வேண்டி இத் 'தமிழ்த் தொண்டர்' எழுதியுள்ளேன். எந்நாட்டிற் பிறந்திருப்பினும் தமிழன்னைக்குத் தொண்டுசெய்தோரெல்லாம் தமிழ்த் தொண்டரெனக் கொண்டு, நந்தமிழ் நாட்டார் இருவர், மேலை நாட்டிற் பிறந்தும் நம் நாட்டில் தமிழராக வாழ்ந்த ஒருவர் ஆக மூவர் வரலாற்றினையும் கிடைத்த சில குறிப்புகளைக்கொண்டெழுதியுள்ளேன். எனவே தமிழன்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் இப்புத்தகத்தை ஆதரிக்க அன்புடன் வேண்டுகின்றேன்.

இச்சிறு நூலை ஏற்று, அச்சியற்றி வெளியிட்ட மணி பதிப்பகத்தாருக்கும், மதிப்புரை வழங்கிய நாவலர். ச. சோமசுந்தர பாரதியார் அவர்கட்கும் இந்நூலைப் பார்த்துதவிய பசுமலை வித்துவான், வீ. ப. கா. சுந்தரம், ஸ்ரீ. வீரநாராயணன் அவர்கட்கும் என் நன்றி.

போர்டு உயர்நிலைப்பள்ளி
சோழவந்தான்.
25–9–51

இங்ஙனம்,
வித்துவான். வீ. ப. நடராஜன்
தமிழாசிரியர்,

பொருளடக்கம்.

பாடம்	பக்கம்
வ. உ. சிதம்பரனார்.	
தோற்றுவாய்.	2
வாழ்வு.	3
நாட்டுத்தொண்டு	8
கப்பல் கட்டல்.	14
சிறை வாழ்வு.	17
விடுதலைக்குப் பின்.	22
தமிழ்த் தொண்டு.	24
கால்டுவெல் ஐயர்.	
தோற்றுவாய்.	29
இளமையும் கல்வியும்.	31
தமிழ் நாட்டு வாழ்வு.	34
கலைத் தொண்டு.	42
இல்லற வாழ்க்கை.	50
இறுதிக் காலம்.	53
நூல்களும் பண்பும்.	55
அரசஞ் சண்முகனார்.	
தோற்றுவாய்.	58
பிறப்பும் வளர்ப்பும்.	59
திண்ணைமடமும், பள்ளிப்படிப்பும்	63
தமிழாசிரியப்பணி.	68
இடையில் நோய்.	70
மதுரைத் தமிழ்ச்சங்கப் பணி.	73
அடைமொழிப் பெயரும், அதன் பொருத்தமும்	77
தொல்காப்பியத் தொண்டு	78
வாழ்வில் ஒரு வியத்தகு நிகழ்ச்சி.	81
இலங்கை செல்லல்	83
திருவாவடுதுறை ஆதீனத் தொடர்பு	84
வாழ்வில் சில நிகழ்ச்சிகள்	87
எழுதிய நூல்கள்	90

கப்பலோட்டிய தமிழன்



வ. உ. சிதம்பரனர்.

தோற்றுவாய்:

"வீர சுதந்திரம் வேண்டி நின்ருர் பின்னர் வேறென்றும் கொள்வாரோ" என்ருர் பாரதியார். வீரம் என்பது, உள்ளத்திலே பிறந்து நிலைபெறு கிற உறுதி. சுதந்திரம் என்பது விடுதலைவேட்கை. நாம் பிறந்த பொன்ஞடாம் இத் தாய்நாடு அந்நியருக்கடிமைப்பட்டுக் கிடந்த காலத்து, விடுதலை வேட்கை கொண்டு உழைத்து வெற்றி கொண்டு விளங்கியோர் பலர். அவருள், தமிழ் நாட்டின் தந்தை வ. உ. சிதம்பரஞர் பெரும்பங்கு கொண்டவர். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந் தவர். கப்பலோட்டிய தமிழனென அழைக்கும் பேறு பெற்றவர். நாட்டைத் தட்டி எழுப்பிய நல்லோர். இன்னலை இனிவுடன் ஏற்ற வீரர்.

நாடு ஒன்று சிறப்படைவது இயற்கை எழில் வளத்தால் மட்டுமன்று; வாழுகின்ற மக்க ளின் புகழாலும், பேசுகின்ற மொழியின் சிறப் பாலும் பிறவற்ருலுமாகும். நாட்டுக்கும் மொழிக்கும் தொடர்புண்டு. நாட்டிற் பிறந்த நல்லோர் பலர் காவியங்கள் புனைந்து நாட்டின் வளத்தைக் காட்டுகின்றனர். மொழியிலுள்ள முன் ஞேர்களின் நூல்களுக்குஉரையெழுதியும்,விருத்தி கண்டும், பொருள் விளக்கம் காட்டுகின்றனர்.

பல்வேறு காலத்தெழுந்த நூல்கள் மூலம், வெவ்வேறு காலமக்கள் நிலை, அறிவு, வளம், செயல் ஆகிய அனைத்தும் அறிகின்றோம். மனிதப் பண்பாடுகளில் சிறந்தது வீரம். வீரத்தைக் கைக்கொண்டோர், அறவழியில் செயலாற்றுகின்றார். பிச்சை வாங்கியுண்ணும் வாழ்க்கை பெற்றுவிட்டபோதிலும் அச்சம் அவரிடம் கிடையாது. இத்தகைய வாழ்வில் ஈடுபட்டு நாட்டுக்கும், மொழிக்கும் ஒருங்கே தொண்டாற்றித் தமிழ் மக்களின் மானங்காத்த தலைவன் வ. உ. சிதம்பரனார். அவர் வாழ்வு படிப்போர் மனதைப் பண்படுத்தும். அவருடைய வாழ்வைத் தமிழர் அனைவரும் அறிதல் மிக மிக இன்றியமையாதது.

<u>வாழ்வு:</u>

"மானம் பொழியுது பூமி விளையுது, மன்னவன் காணிக்குக் கப்பமேது" என்று முழங்கினான் அஞ்சாத ஆண்சிங்கம் கட்டபொம்மன். ஆங்கிலக் கும்பினியின் அநீதிகளை எதிர்த்துப் போரிட்டுப் புகழ்பெற்ற அவன் நாடு பாஞ்சாலங்குறிச்சி. அதன் அண்மையில் அமைந்தது ஒட்டப்பிடாரம் என்னும் சிற்றூர். எனினும் தாலுக்கா கச்சேரியும், தாலுகா நீதி வழங்கும் அவையும் அவ்வூரில் இருந்தன. பாரதியார் பிறந்தவிடமான

எட்டையபுரமும் பக்கத்திலே எட்டுக்கல் தொலே விலேயே உள்ளது, ஓட்டப்பிடாரத்திற்கு அளகா புரியென்றும் அளகையென்றும் பெயர்கள் உண்டு.

எட்டையபுரம் அரசுகட்டில் எழிலுற்று விளங்கிய அந்நாளில், உலகநாதபிள்ளேயென்பார் ஓட்டப்பிடாரத்தினின்று ஆங்கு வந்து வழக் குரைஞர் தொழில்பார்த்து வந்தார். அன்னுரின் வாழ்க்கைத் துணேவியார் பரமாயி அம்மையார். இருவருக்கும் ஏழு மக்கள் பிறந்தனர். மூவர் பெண்களும், நால்வர் ஆண்களும் அடங்கிய அவ் வெழுவரில், ஒருவரே நம்வீரர் வ. உ. சிதம்பரனுர். இவர் 1872-ம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 5-ம் நாளன்று பிறந்தார். ஆறு ஆண்டளவும் அருமை பெருமையாக வளர்க்கப்பட்ட அவர் ஆரம்பக் கல்விச்சாலேயொன்றினுக்கு அனுப்பப்பட்டார். 'விளேயும் பயிர் முளேயிலே தெரியும்' என்ருற் போலச் சிறு வயதிலேயே வீரனுக்குரிய உறுதி அவரிடம் விளங்கியது. துள்ளிவிளேயாடும் பருவ மாகிய அவ்வயதில் துடுக்குகள் மிகவும் செய்து வந்தார் சிதம்பரனுர். தந்தையின் தண்டனேயும் அவ்வப்போது தவறியதில்லே. விளேயாட்டுக்களில் வீரமும், கல்வியிலே கருத்தும்கொண்டு விளங்கிய அவர், தொடக்கக்கல்வியை முடித்துத் தூத்துக்குடி சென்று கால்டுவெல் கல்வி நிலேயத் தில் சேர்ந்தார்.

இவ்வாறு கலாசாலைகளில் கல்வி கற்கும் போதே தமிழ்மொழிப்பற்று அவர் உள்ளத்தில் உண்டாயிற்று. பள்ளி இறுதிப் படிப்பு முடிந்தது. ஒட்டப்பிடாரத்தில் உள்ள தாலூகா அலுவலகத்தில் ஒரு வேலை கிடைத்தது சிதம்பரனாருக்கு. அலுவலில் அமர்ந்த உள்ளம் அதில் ஊன்றவில்லை. தந்தையார் கட்டளை பெற்று, அவ்வேலையினின்று விடைபெற்றுத் திரிசிரபுரம் சென்று சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். வழக்குரைஞர் வாழ்வுக்கு வகைகோலி சட்ட நுட்பங்களையெல்லாம் சரிவரக் கற்று வெற்றிகண்டார். திரும்பிவந்து உள்ளூரிலேயே வழக்குரைஞர் தொழிலை உவந்தேற்றார். தொட்டதெல்லாம் துலங்கியது அவ்வாழ்வு. 'உள்ளத்தில் ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்' என்பதுவும் உண்மையன்றோ! பிணக்குகளின் கணக்காய்ந்து பிழை களைந்து அறந்தழைக்கச் செய்வதுவே, அறநிலையப் பெருவேலை என்பதே நம் வீரர் கொள்கை. பொய்க்குற்றம் புகாவாறும். புன்மையர்கள் மிகாவாறும் செய்து அறச் செயல்கட்கு ஆதரவு தேடுவதே வழக்குரைஞர் தொழில், என்பது சிதம்பரனாரின் திடமான முடிவு. எனவே, பொய் வழக்குகள் எதனையும் ஏற்காமல், உண்மை வழக்குகளில் ஊக்கமுடன் வெற்றிகாண

உழைக்கலானார். சிதம்பரனார் பெயரும், புகழும் பெரிதும் மேலோங்கின.

அலுவல் பார்த்து வருங்காலத்திலும் தமிழ் நூல்கள் ஆராய்ச்சி சிதம்பரனாரிடம் இருந்தே வந்தது. இத்தகைய தக்காரின் இல்வாழ்வில் உடனுறைந்து துணைபுரிந்த துணைவியரை அறிந்துகொள்ளல் இன்றியமையாதது.

திருச்செந்தூரில் சுப்பிரமணியபிள்ளை என்னும் நல்லாரொருவர் இருந்தார். அவர்தம் மகள் வள்ளியம்மை. இவ்வம்மையாரும் இளவயதிலேயே தமிழ் நன்குகற்றவர். தமிழ்ப்பெருநூலாம் திருக்குறள் முழுமையும் கற்றறிந்து அதற்குப் பொருள் சொல்லும் வல்லமையும் பெற்றிருந்தார். பெண்கல்வியால் பெரிதும் தீமையுண்டு என எண்ணியிருந்த பத்தொன்பதாம் நூற்றாண்டில்,இத்தகைய உயர் நூலை ஒரு மாது தெளிவறக் கற்றிருந்த திறம் நோக்கின், அவர்கள் குடும்பத்தின் கூர்மையறிவு புலப்படுகின்றது, 'கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக' என்னும் வள்ளுவர் வாக்கை நிறைக்கவந்த நெஞ்சுடையார்போலும். இவ் வள்ளியம்மையாருக்கும், சிதம்பரனார்க்கும் வாழ்க்கை ஒப்பந்தம் அவரதுஇருபத்துமூன்றும் ஆண்டில்

இனிது நடந்தேறியது. இருவரும் பண்பும் பயனுமிக்க இல்லறம் நடத்தினர். கணவனைப் போற்றல், சுற்றம் பேணல், ஏழைகட்கு இயன்றவை ஈதல், இன்மொழியே பகர்தல், இன்னோரன்ன அருங்குணங்கள் பலவும் அவ் வம்மையார்பால் அரும்பி மிளிர்ந்தன. வாழ்க்கை யெனும் வண்டி, அவர்கள்பால் செவ்வனே சென்றுகொண்டிருக்கும் நாளில், வள்ளியம்மை யார் எதிர்பாராது இவ்வுலகினின்றும் விடை பெற்றார். இப்பிரிவு பிள்ளையவர்களைப் பெரிதும் கலங்கச் செய்தது. அக்கால் அவரே அம்மையார் நினைவால் பாடிய வெண்பா ஒன்று பின்வருமாறு:

என்னுடைய நேயர்களும் ஏழைபர தேசிகளும்
என்னுடைய வீடுவந்தால் ஏந்திழைதான் தன்னுடைய
பெற்றோர்வந் தார்களெனப் பேணி உபசரிப்பாள்
கற்றோரும் உள்ளுவக்கக் கண்டு.

'தற்காத்துத் தற்கொண்டான்பேணித் தகை சான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்' என்னும் பெருமொழிக் கிணங்கத், தமிழ்நாட்டு மாதர் கட்கோர் சான்றாகத் திகழ்ந்து, கடமை தவறாது வாழ்ந்து இவ்வையகந்துறந்த அவரது நினைவு சிதம்பரனாரை விட்டுப் பிரியவில்லை. எனினும், பல அன்பர்களின் வேண்டுதலால் பெற்றோரின்

தூண்டுதலும் ஒருங்கு சேர்ந்து நெருக்க, அதே குடும்பத்தில், மீனாட்சியம்மைஎன்றஒருபெண்ணை இரண்டாம் மனைவியாக ஏற்ருர். இவரும் முன்னையர் போலவே நற்குண நற்செய்கையில் சிறந்து சிதம்பரனாரின் வாழ்வில் பெரிதும் பங்கு கொண்டார்.

நாட்டுத் தொண்டு:

வழக்குரைஞர் தொழில் பார்த்து வாழ்வு நடத்திவந்த வ. உ. சி. அவர்கள் பெயர் வையகத்தில் ஓங்கும் வகை பிறந்தது. இடையிடையே தமிழ்நூல்கள் பார்த்துவந்தார். 'எங்கள்தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே' என்ற பாரதியின் வீர மொழியை அத் தமிழ் நூல்கள் விளக்கின. எந்தந்தையாம் மூவேந்தர்கள் ஆட்சி. அக்காலத்தில் இந் நாடிருந்த எழில், இந்நாட்டுச்செல்வம் சிறிதுசிறிதாக வேற்றுநாடு செல்லுகின்ற கொடுமை, ஆருயிரம் மைல்கட்கப்பாலிருந்து வந்து ஆங்கிலேயர் செய்கின்ற அநீதி ஆட்சிபோன்ற எண்ணங்கள் அவருள்ளத்தில் ஊன்றின, ஆங்கிலமும் தமிழும் ஒருங்கே கற்றறிந்த அறிஞராகத் திகழ்ந்ததால், ஆங்கிலேய ஆட்சியினர் செய்த வஞ்சகங்கள் அனைத்தும் அவருக்கு விளங்கின.

1905-ம் ஆண்டில் லார்டு கர்சன் என்பார் இந்தியாவில் அரசப் பிரதிநிதியாக விருந்தார். கங்கைநதி பெருக்கெடுத்துகாட்சிதரும் வங்காளம், இந்துக்கள் முஸ்லீம்கள் என இருமதத்தினரால் நிறைந்திருந்தது. எனினும் இருபிரிவினரும் இந்நாட்டில் பிறந்த மக்கள். அண்ணன் தம்பிகளாக வாழ்ந்த அவர்களைப் பிரிக்கச் சூழ்ச்சி செய்தார் ஆங்கில ஆட்சியார், பிற நாட்டைச் சுரண்டுவதில் பேர்போன ஆங்கிலேயர் வங்காளப் பிரிவினையைப் புகுத்தினர். எதிர்த்தனர் வங்க மக்கள். இவ் வங்கக் கிளர்ச்சி வலுப்பெற்றுப் பெருகியது. இந்தியா முழுவதிலும் எட்டியது. அக்கால வாழ்ந்திருந்த திலகர்பெருமான் அக் கிளர்ச்சிக்குத் தலைமையேற்றார். தமிழ் நாட்டிலும் இப்புரட்சி தழைத்தது. ஏற்கெனவே அகத்தில் அனல்கொண்டு உழன்று வந்த சிதம்பரனாருக்கு இக்கிளர்ச்சி எண்ணெய் வார்த்தாற்போல் வந்து சேர்ந்தது. வழக்குரைஞர் தொழிலைவிட்டு நாட்டுக்கு நல்ல தொண்டு செய்ய விழைந்து, அவ்வாறே முடிவு கட்டினார். ஆங்காங்கு கூட்டங்கள் கூட்டி அரிய சொற்பொழிவுகள் ஆற்றி அன்னியப் பொருள்களை அகற்றுமாறு அன்புடன் வேண்டினார். அன்னிய நாட்டுப் பொருள்கள் அக்கினிக்கு இரையாயின. சுதேசி

இயக்கம் வளரத் தொடங்கியது. ‘வீர சுதந்திரம் வேண்டி நின்ருர் பின்னர் வேருென்று கொள் வாரோ’ என்ற வாக்குப்படி எல்லாவற்றையும் வெறுத்து நாட்டுத் தொண்டில் இறங்கினர் நம் பெரியார்.

ஒட்டப்பிடாரத்திலிருந்த கச்சேரிகளெல்லாம் மூடிவிட்ட காரணத்தால், தூத்துக்குடியில் தொழில்பார்த்து வந்த சிதம்பரனர் 1906—ம் ஆண்டு சென்னை சென்ருர். திருவல்லிக்கேணி நண்பர் ஒருவர் இல்லத்தில் தங்கினர். ‘இந்தியா’ பத்திரிகை நடத்துமிடம் நோக்கிச் சென்ருர். ஆசிரியர் திருமலாசாரியாரை அறிந்தார். அவருடன்வீற்றிருந்தார் ஒருவர். முறுக்கிய மீசை, முண்டாசுக் கட்டு, வீரக்கனல் வீசும் விழிகள், எவரிடத்தும் அஞ்சாத மார்பு, அனைத்தும் அவரிடம் அமைந்து விளங்கக் கண்டார். அவரே சி. சுப்பிரமணியபாரதியென அறிந்து அகமகிழ்ந்தார். ஒட்டப்பிடார வக்கீல் உலகநாத பிள்ளையின் மகன் சிதம்பரம்பிள்ளையென உரைத் தார். உடனே பாரதியார் எழுந்து உள்ளங்குளிர, உரிமையுடன் பல குடும்பக் கேள்விகள் கேட்டார். பாரதியாரின் தந்தையார் எட்டையபுரம் சின்னச்சாமி ஐயரும் சிதம்பரனர் தந்தை உலகநாதபிள்ளையும் உயிர்த்தோழர்கள். கல்வி

யறிவிற் சிறந்து கலந்து பழகியவர்கள். ஆதலின் அவ்விருவருடைய மக்களும் அன்பால் பிணைக் கப்பட்டதில் ஆச்சரியமில்லை. திருநெல்வேலி மாவட்டத்திற்கே சிறப்பான தமிழ்ப் பாணியில் இருவரும் பேசினர். பல்வேறு குறிப்புகட்குப் பின், நாட்டுப்பற்றுத் தொடர்புள்ள பேச்சுக்கள் நடந்தன. சிதம்பரனாரின் ஆழ்ந்த நாட்டுப் பற்றைக் கண்டு பாரதியார் பாராட்டினர். தனது வெறிமிகுந்த பேச்சினாலும், சுவை நிறைந்த கவி யினாலும் வீரத்தை ஊட்டினார் சிதம்பரனார்க்கு. "என் உள்ளத்தில் மின்மினிப் பூச்சி போன்று மின்னிக் கொண்டிருந்த தேசாபிமான நெருப்பு விளக்குப்போல் ஒளிவிட்டுப் பிரகாசித்தது" என்ற இம் மொழிகளை, அம் முதல் சந்திப்பிலேயே பெற்றதாகச், சிதம்பரனார் தம் கைப்பட எழுதி வைத்திருப்பின் வேறு எவர் என்ன எழுத இய லும்? 'இந்த முதல் சந்திப்பு என்னைச் சோழனாக வும் பாரதியைக் கம்பனாகவும் நான் நினைக்கும்படி செய்தது' எனவும் எழுதியுள்ளார். பாரதியாரின் முண்டாசுக்கட்டின் முன்தானைத் துணி, காற்றில் வெற்றிக்கொடி போலப் படபடவென அடித்துப் பறந்தது. வந்துபோன சென்னைக் கடற்கரையின் அலைகள் பேரொலி செய்து இவ்விருவரையும் வாழ்த்தின. ஒரு சில நாட்களின் பழக்கத்திற்குள்

ளாகவே கம்பனும் சோழனுமாயிருந்த பாரதியும் சிதம்பரனரும், மாமனும் மருமகனுமானர்கள். என்னே இவர்கள் உறவின் வன்மை! பண்பு கொண்ட உள்ளங்கள் பழகுங்கால், குலம், நிறம், உயர்வு, தாழ்வு, பணம் அனைத்தும் பறந்தோடு மன்றே! நாட்டாட்சியினை நம்மவரே கைக் கொள்ள நாடோறும் திட்டமிட்டே வந்தனர். 'சென்னை ஜன சங்கம்' என்ற பெயர் கொண்ட ஒரு கழகம் நிறுவப்பட்டது. அது செய்ய வேண்டிய பணிகளெல்லாம் செவ்வனே வரை யறுக்கப்பட்டது. பிள்ளையவர்கள் தூத்துக்குடி திரும்பினர்.

1907-ம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 'சூரத்' என்னும் தொன்னகரில் 'இந்திய தேசிய காங் கிரஸ்' நடைபெறுவதாகவிருந்தது. மிதவாதிகள் தீவிரவாதிகள் என இரு பிரிவுகள் அக்காலையே இருந்தன. திலகர் தீவிரக் கட்சியின் தலைவராய்த் திகழ்ந்தார். சூரத் காங்கிரஸ் சபைக்குத் தலைவர் தெரிந்தெடுக்கும் காலம் வந்தது. அதில் வேறு பட்ட கருத்துக்கள் காங்கிரஸில் வேற்றுமை யுண்டாக்கின. கல்கத்தாவைச் சேர்ந்த பெரிய வழக்குரைஞர் ராஷ்பிகாரிகோஷ் தலைவராக வேண்டுமெனக் கிளர்ச்சி செய்தனர் மிதவாதிகள். பாஞ்சால நாட்டுச் சிங்கம் லாலா லஜபதிராய்

என்பவரைத் தலைவராக்க விரும்பினர் திலகர் கூட்டத் தீவிரவாதிகள்.

தென்னாட்டுச் சுதேசி இயக்கம் பரவிய திறனறிந்து, இதற்கு மூலகாரண முதல்வர் சிதம்பரனார் எனதெரிந்தநாள்தொட்டுத் திலகர் பெருமான் இவரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். ஆதலின் சிதம்பரனார் பிரதிநிதிகள் நூற்றுக்கதிகமான பேரோடு, வரவேண்டுமென வேண்டுதல் விடுத்தார் திலகர். அரவிந்தர் அக்காலையில் 'வந்தேமாதரம்' என்றதோர் பத்திரிகை நடத்திவந்தார். திலகர் 'கேசரி' என்ற பத்திரிகையின் ஆசிரியர். இரு பத்திரிகைகளும், இதர பல தினசரிகளும், லஜபதியை ஆதரித்தெழுதின. சிந்தித்தார் சிதம்பரனார்; பாரதியைக் கலந்து பல பிரதிநிதிகளைப் பொறுக்கி, உடனழைத்துச் சென்றார். சூரத் காங்கிரஸ் கூடியது. கூட்டத்திற்கு முன்பே, கூடாரப் பாடிகளில் தங்கியிருந்த மிதவாதத் தலைவர்கள் கோகலே, மேத்தா முதலியவர்களைக் கலந்து ஓர் இனிய முடிவுக்கு வர இயன்றதைச் செய்துபார்த்தனர்; பலனில்லை. கூட்டம் தொடங்கியது. கிளர்ச்சி வலுத்தது. திலகர் மேடைக்குச் சென்றார். எதிர்க்கட்சியினர் நாற்காலி, தடி இவை கொண்டு தாக்க முயற்சித்தனர். வன்மையும்

1958

அறிவும் மிக்க வ. உ. சி., பாரதியாருட்பட பல சென்னை அன்பர்கள் மேடைக்கு விரைந்தனர். திலகரது திருமேனியை எதுவும் தீண்டவிடாது காத்தனர். கூட்டம் குழப்பமாகிக் கலைந்தது. மிக மிக இரக்கங்கொள்ளும் காட்சி! 'இந்திய நாடிது என்னுடைய நாடு' என்ற எண்ணத்தில் ஆங்குக் கூடியவர் எவரும் இளைத்தவரல்லர். தாய் விலங்கு தகர்த்தெறிந்து, நாடிதனைத் தாமே ஆட்சி செய்ய எவரும் தயங்கியவரல்லர். அன்னை படும் அல்லல்களை ஆய்ந்தறிந்து, அரும்பாடு பட்டேனும் அன்னியரை வெருட்டவென ஆங்கு குழுமியவர் அவ்வறிஞர். எனினும், ஒரு சிறு வேறுபாடு அவர்களிடம் புகுந்து வாட்டி அவர்களது ஒற்றுமையின் வேரறுத்தது. 'உறு பசியும் ஓவாப்பிணியும் செறுபகையும் சேரா தியல்வது நாடு' என வள்ளுவர் காட்டுகின்ற நாட்டை என்று காண்போம் என ஏங்கி உள்ளம் நைந்து தத்தம் நாடு திரும்பினர்.

கப்பல் கட்டல்:

மூவேந்தர்களில் சிலர் கடல் கடந்து பிற நாடுகளை வென்று தங்கொடியை ஆங்கு நாட்டி யுள்ளனர். கரிகாற்பெருவளத்தான், இராஜராஜ சோழன், இராஜேந்திரசோழன் ஆகியோர் அவர்

களிற் சிலர். சீனு, எகிப்து, அரேபியா, ரோமாபுரி முதலிய பல பிற நாடுகட்குச் சென்று வாணிகஞ் செய்து பெரும் பொருள் திரட்டியுள்ளார் தமிழ் நாட்டார். இக் கருத்துக்கள் செறிந்த சங்கநூற் பாட்டுக்கள் நுங்கன் சிதம்பரனர் கவனத்தை ஈர்த்தன. தவிர தமிழ்நாட்டுக் கவிஞரும், சிதம் பரனர் மாண்புமிகு மாமா என்றுறவு கொண்டழைப்பவருமான பாரதி பாடியுள்ள பாட்டைக் கண்டார்.

> "சீன மிசிரம், யவனரகம் இன்னும்
> தேசம் பலவும் புகழ்வீசிக்—கலை
> ஞானம் படைத்தொழில் வாணிகமும் மிக
> நன்று வளர்த்த தமிழ்நாடு.

கப்பலேறிக் கடல்கடந்து வாணிகஞ் செய்து பொருளீட்டல் தமிழ் நாட்டாருக்குப் புதிதல்ல வென உணர்ந்தார். தூத்துக்குடி, கடற்கரையில் அமைந்துள்ள துறைமுகப் பட்டினமாதலின், ஆங்கிலேயர் பிறநாடுகட்கும். தீவுகட்கும் இங்கிருந்துகப்பலோட்டி வாணிகஞ்செய்துவந்தனர். இதற்குப் போட்டியாகக் கடல்மேற் செல்லத் திட்டமிட்டார் நம் சிதம்பரனர். இத்திட்டத்தின் விளைவுதான் 'சுதேசி ஸ்டீம்நாவிகேஷன்' கம்பெனி. பணந்திரட்ட முற்பட்டார். பாலவனத்தம் ஜமீன்தார் திருவாளர். பாண்டித்துரைத்தேவர்

ஒருலட்ச ரூபாயளித்தார். ஜனுப் ஹாஜி முகம்மது பக்கீர்சேட் என்பவரும் பெருந்தொகை கொடுத்தார். கப்பல்கள் கட்டுவது எளிதான காரியமல்ல; எனவே, வலிய உளம்படைத்த வ. உ. சி. வடநாட்டுக்கும் பொருள்திரட்டச்சென்றார்.

> 'எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
> திண்ணிய ராகப் பெறின்'

என்ற வள்ளுவர் வாக்கை நன்குணர்ந்த இவர் திடமனதுகொண்டு திட்டம் நிறைவேறப் பாடுபட்டார். பம்பாய் செல்லும்போது "நான் மீண்டும்தமிழ்நாடு திரும்புங்கால் இரண்டு கப்பல்களுடன் வருவேன்; இல்லையேல் கடலில் விழுந்திறப்பேன்" என்ற வீரமொழி பேசி விரைந்தேகினர். வீரன் தன் வாழ்வில் முன்வைத்த காலைப் பின்னெடுக்க விழையானன்றோ? பிள்ளையவர்கள் சென்றபின் மகனும், மனைவியும் நோயுற்றனர். நண்பர்கள் இத்தகவலறிவித்தும், ஆங்கிருந்தவாறே இறைவன்பால் ஒப்புவித்தார். வந்தவேலை முடிவடைந்து கப்பல்களை வாங்கியபின் எல்லோருங் கண்டுகளிக்க வந்தடைந்தார் தாய்நாடு. நம் நாட்டுக் கப்பல்கள் போட்டியிட்டு விரைந்தன. பண்டைய தமிழர்கள் சிறக்கவிட்ட கப்பலை, தமிழர் மரபில் தலையெடுத்த சிதம்பரனார் மீண்டும் தொடங்கிய நாள்தொட்டுக் 'கப்பலோட்டிய தமிழனாக' விளங்கினர்.

ஆத்திரம்கொண்ட ஆங்கிலேயர் போட்டி நிலைகண்டு பொங்கினார்கள்; எப்படியும் இதை ஒழிக்க எண்ணங் கொண்டனர்; சிதம்பரனாரைத் தனியே அழைத்தனர்; பெருந்தொகை அளிப்ப தாகப் பேராசை காட்டினர். அணுவளவும் அசைந்தாரில்லை நந்தமிழர். வஞ்சகத்தால் வெல்ல வகை தேடினர். ஆங்கில ஆட்சியின் அலுவலாளர்களிடம் சிதம்பர வீரன் மேல் வெறுப்பூட்டினர்.

தேசியகாங்கிரஸ் மகாசபையிற் சேர்ந்திருந்த சிதம்பரனார், திலகர் பெருமானின் தொடர்பு மூலம் தேசப் பணியிற் சிறிதும் தளராது, அவ்வப்போது தொண்டாற்றி வந்தார். தமிழ் நாட்டுத் தலைவரென வடநாட்டாரும், ஆட்சி செய்த ஆங்கிலேயரும் அறிந்தனர். சுப்பிர மணியசிவா சிறந்த பேச்சாளர். தமிழ் நாட்டில் பலவிடங்களில் அவரைப் பேசும்படி செய்த துடன் தானும் வீர முழக்கம் புரிந்து வெள்ளை யரை விரட்டவேண்டுமெனக் கிளர்ச்சி செய்தார். தமிழ் மக்கள் அனைவரும் தட்டியெழுப்பப் பட்டனர்.

சிறை வாழ்வு:

1908-ம் ஆண்டு மார்ச்சு 9-ம் நாள் சிறையி லிருந்து விடுதலை பெற்றார் விபன சந்திரபாலர்

என்னும் தேசத்தலைவர் ஒருவர். அந்நாளைக் கொண்டாடத் திருநெல்வேலி மாவட்டம் முழுவதும் சிறந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதையறிந்த 'ஆஷ்' என்ற கலெக்டர் துரைமகன் தடையுத்தரவு ஒன்றை அனுப்பி, சிவாவும்-சிதம்பரனரும் கூட்டங்களில் கலக்கலாகாதெனக் கட்டளை பிறப்பித்தான். கட்டளையை மீறிக் கூட்டத்தில் சொற்பொழிவு முழக்கினர். ஆங்கிலேயர் செய்கின்ற அநீதிகள் எடுத்துரைக்கப்பட்டன. தூத்துக்குடியில் கைது செய்தால் மக்கள் கிளர்ச்சி வலுக்குமெனவறிந்த ஆஷ் துரை, திருநெல்வேலிக்கு வருமாறு இருவருக்கும் கட்டளையிட்டான். இதற்கோ அஞ்சுபவர்கள் நம் 'வீரர்கள்!' இருவரும் திருநெல்வேலி மாவட்டத்தில் இருத்தல் கூடாதென நாடுகடந்து செல்ல உத்தரவிட்டான். உத்தரவுக்குப் பணிய உள்ளமில்லா இருவரும் உடனே அதை மறுத்தனர். எனவே, தமிழ் மக்களிருவரும் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு வீரர் இருவரும் கைது செய்யப்படவே ஆத்திரமடைந்த பொது மக்கள் திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் பல அடாத செயல்கள் புரிந்தனர். இதற்கு அஞ்சி தூத்துக்குடியிலிருந்த வெள்ளையர்கள் இரவுப்பொழுதைக் கப்பலிலேயே கழித்

தார்கள். வழக்கு விசாரணை நடைபெற்றது. அரச நிந்தனைபேசியதாகவும்,உடன்கிளர்ச்சிக்காரரான சுப்பிரமணிய சிவாவுக்கு உணவும் உறையுளும் நல்கியதாகவும் இரு குற்றங்கள் சாட்டப்பெற்றன.

பாளையங்கோட்டைச் சிறையில் விசாரணைக் கைதியாக அடைக்கப் பெற்றனர். பாரதியாரும் நண்பர் பலரும் சென்னையிலிருந்து வந்து சிறைக்கூடத்தில் கண்டு கண்ணீருகுத்தனர். அவர்கட்கு ஆறுதல்மொழி கூறி அனுப்பினர் நம் ஆண்மகன் சிதம்பரனர். பாரதியார் சென்னை சென்று "நாட்டிலெங்கும் சுதந்திர வாஞ்சையை நாட்டினுய்" என்று விஞ்சுதுரை கேட்பது போலவும் "சொந்தநாட்டிற் பரர்க்கடிமைசெய்தே துஞ்சிடோம் இனி அஞ்சிடோம்" என்ற பாட்டு சிதம்பரனர் பதிலளித்த முறையிலும் பாடி வெளியிட்டார். நாட்டு மக்கள் அப்பாடலை நன்கறிந்து மேன்மேலும் வீரங்கொண்டனர். இறுதியாக அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி பின்னே (**A. F. Phinhey**)யால் சிதம்பரம் பிள்ளைக்கு இரட்டை ஆயுள் தண்டனையும், (40-ஆண்டுகள்) சிவாவுக்குப் பத்து ஆண்டுக் கடுங்காவல்தண்டனையும் கொடுக்கப்பட்டன. நீதிபதி பின்னேயின் பிழைபட்ட தீர்ப்பு, பத்திரிகைகளிலெல்லாம் பெரிதும் கண்டித்தெழுதப்பட்டது. 'இந்தியா'

பத்திரிகை ஆசிரியர் இவ்வாறு எழுதியமைக்காகத் தண்டிக்கப்பட்டார். 'இந்தியா' பத்திரிகைக் காரியாலயம் புதுவைக்கு மாற்றப்பட்டது. அந்தமான் தீவில் வசிக்குமாறு தண்டனையளித்த அந்நிய ஆட்சியை என்னென்பது! இவ்வநீதியான முடிவையறிந்தமனைவி மீனாட்சியம்மையார் நெருப்பிலிட்ட புழுவெனத் துடித்தார். அத் தண்டனையை அகற்ற சென்னை உயர்தர நீதி மன்றத்தில் மனுச்செய்தார். இரு நீதிபதிகள் வழக்கை மீண்டும் விசாரித்து, சிதம்பரனுர்க்கு தீவாந்திர தண்டனையைமாற்றி ஆறு வருடமாகக் குறைத்தனர்.

அரசியற்கைதிகள், இன்றைக்கு ச்சிறைகளிலே அனுபவிக்கும் வசதிகள் ஒரு சிறிதும் இல்லாத அக் காலத்தில், கொலை களவு குற்றங்கட்குத் தண்டனையடைந்த கைதிகளைப்போலவே அரசியற் கைதிகளையும் நடத்தினர். வ. உ. சி.யின் உடைகள் நீக்கப்பட்டு, தலைக்குச் சிவப்புநிறச் சிறைக்குல்லாவும், கையும் காலுமில்லாத காற் சட்டை - கைச்சட்டைகளும் அணிவித்தனர். அதுமட்டுமோ! வலக்காலிலே இரும்பு வளையம் மாட்டினர். "மூன்றையும் அணிந்திடில் முண்டமேயாகத் தோன்றுவதல்லது சொரூபம் தோன்ருத் திறத்தவை" எனச் சிதம்பரனுரே பாடினர்.

கால்களில் அணியப்பெற்ற இரும்பு வளையங்களை வீரக்கழலாக எண்ணினர். அரசியல் தலைவர், தமிழ் நாட்டின் தந்தை, கப்பலோட்டிய வீரன், செந்தமிழ்ப்பாக்களியற்றும் செவ்வேள், படுகின்ற பாட்டினையறிந்து தமிழ் நாடே தாங்காத்துயருற்றது. எல்லாவித இன்னல்களையும் இனிதாக ஏற்றுக்கொண்ட சிதம்பரனாரை, இந் நாட்டு வீரனைப் புகழ்வதற்கும் மொழிகளுண்டோ?

மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக நின்று வழியனுப்பிய காட்சியைக்கண்டு, சிறிதும் மனங் கலங்காது 'விரைவில் வருவேன், விடாதீர் தாய் நாட்டின் விடுதலைப்போர்', என முழக்கம் செய்து சென்றார்.

சிறைக் கோட்டத்தில், இவரிடம் சணற்கயிறு சுற்றுகின்ற யந்திரம் ஒப்படைக்கப்பட்டது. சுற்றிச் சுற்றிக் கைத்தோல் நைந்து இரத்தம் கசிவு எடுத்தோடியது. அதைக்கண்ட சிறையதிகாரி செக்கிழுக்கும் வேலையிற் சேர்ப்பித்தான். புதுச்சேரியில் வாழ்ந்த பாரதியார் இதையறிந்து,

"மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்,
நூலோர்கள் செக்கடியில் நோவதுவும் காண்கிலையோ"

எனப் பாடினர்.

தமிழ் நாட்டு மக்களின் கொதிப்பைக் கண்டும், 'அப்பீல்' செய்திருந்த காரணத்தாலும் வேலை சற்றுகுறைந்தது. அக்காலத்திலேதான் நம் பெரியார் 'மனம்போல் வாழ்வு' 'அகமேபுறம்' 'வலிமைக்கு மார்க்கம்' என்னும் அரிய நூல்களெழுதி தமிழ்மொழிக்குத் தொண்டு செய்தார். இத்தகைய இன்னல்களின் இடையேயும் தமிழன்னை உயர வழி வகுத்த சிதம்பரனரன்றே தமிழ்ப் புதல்வன்! சிறைக்கோட்டத்தில் அடைபட்டிருந்த குற்றக் கைதிகள், அரசியல் கைதிகள் அனைவரும் நம் பிள்ளையவர்களின் அகந்தூய்மை புறந்தூய்மை இரண்டுங்கண்டு தாங்களாகவே அவருக்குப் பணிவிடைகள் புரிந்தனர். கைதிகளிடங்கூட இத்தகைய கருணையுடன் நடந்து கொண்ட வீரன், கலங்கா நெஞ்சினராய்க் கழித்தார் தம் சிறை வாழ்வை. சிறையிலிருக்கும் போதும் பத்திரிகைகள் படித்து நாட்டின் நிலையறிந்தே வந்தார்.

விடுதலைக்குப் பின்:

ஐந்தாம் ஜார்ஜ் முடிசூட்டிய காரணத்தால் 1912-ம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் விடுதலையளிக்கப்பட்டார். மைத்துனர் அனுப்பிய வீட்டுடையணிந்து நாட்டினுள் புகுந்தார். 1920-ம் ஆண்டிற்கு முன்னர் தேசியப்பணி செய்த

தலைவர்கட்குஇந்நாடு தனிப்பட்ட முறையில் தலை வணக்கம் செய்யவேண்டும். ஏனெனில், வந்தே மாதரம் என்று சொல்ல வாய் கிடையாது. தேசியப்பற்று எனக் கண்டால் சிறைவாசம்; சிறைக்கூடம் என்றால், படித்த அறிஞர் எனச் சொல்லி ஆட்சி செய்த வெள்ளைப் பரங்கிகளின் கொடுஞ்செயற் கூடம்; அதில் உணவோ, உப்பில்லாக் கேழ்வரகுக் கூழ்; கல் மண் நிறைந்த கஞ்சி; உதை, மிதி, அடி; கல்லுடைப்பு, செக் கிழுத்தல், கயிறு பின்னல், செங்கற்கள் சுமத்தல் ஆகிய கடினவேலை. உடையின் அழகோ சொல்ல முடியாது. இத்தனை இன்னல்களும் உண்டு. இன்னும் என்னென்ன கொடுமைகளோ! அத்த னையும் அன்னையாம் இத்திரு நாட்டைக்காக்க வென, அன்னியரை வெருட்டவென, "நாமிருக் கும் நாடு நமதென்பதறிந்தோம், இது நமக்கே உரிமையாமென்பதறிந்தோம், இந்தப் பூமியி லெவர்க்குமினி அடிமை செய்யோம், பரிபூரண னுக்கே யடிமை செய்து வாழ்வோம்" என்ற பாரதியின் வீரமொழி பாடினர். அவர்களல்லவா வீரர்?

சிறையினின்றும் வெளிவந்த வீரரைச் சிறப்புடன் வரவேற்கவும் ஆளில்லை. பாரதியும் சிவாவும் மட்டுமே அதில் பங்குகொண்டனர். அவ்வளவு அச்சங்கொண்டு அதிகாரவெறிக்குப்

பயந்து அனைவரும் அகன்றுவிட்டனர். 'உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்ச மில்லை' எனப்பாடித் தமிழ் நாட்டைப் பாரதி விழிக்கச்செய்தும், 1912-ம் ஆண்டின் இறுதியில் வாழ்ந்த தமிழரைப் பார்த்து 'நெஞ்சு பொறுக்கு தில்லையே, இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்' என்றும் பாடவேண்டியிருந்தது.

தென்னுட்டு நம்தந்தை சிறைகிடந்த அதே காலத்து, வடநாட்டில் சிறைகிடந்தார் திலகர். அன்புச் செல்வமாகிய சிதம்பரனுர்க்குப் பணம் அனுப்பி உதவினுர் அப்பெரியார். சிதம்பரனுர் சிறைவாசக் காலத்தில் கப்பல் கம்பெனி உடைந்தது. போட்டியிட்ட ஆங்கிலேயரிடமே அக் கப்பல்கள் விற்கப்பட்டன. இதையறிந்த வ. உ. சி. மனம் வருந்தினுர்.

தமிழ்த் தொண்டு:

சென்னையில் மயிலாப்பூர், சிந்தாதிரிப் பேட்டை, பிரம்பூர் ஆகியவிடங்களில் சில்லாண்டுகள் கழித்தார். இப் பெரியாரின் வறுமைகண்டு மனமிரங்கிய இ. எச். வாலஸ் என்னும் நீதிபதி இழந்துபோன வக்கில் 'சன்னத்தைத் திரும்பவும் வாங்கித் தந்தார். நல்லோர்கள் எங்கும் உண்டுஎன்பதற்குச் சான்றுபோலும்! சிதம்பரனுர்

அவர்கள் கோயிற்பட்டி சென்று வழக்குரைஞர் தொழிலில் மீண்டும் ஈடுபட்டார்.

சிதம்பரனார் அவர்கள் சென்னையிலிருந்த காலத்தில் தமிழ்மொழிக்குச் சிறந்த தொண்டாற்றினார். திருக்குறளுக்கு மணக்குடவர் உரையை வெளியிட்டார். தாமே ஆங்கிலத்தில் திருக்குறளை மொழி பெயர்த்தார். தமிழ் வளர வேண்டுமென எண்ணங்கொண்டு 'ஜேம்ஸ் ஆலன்' என்னும் ஆங்கிலப் பெரியாரின் நூல் மொழி பெயர்ப்பாக 'அகமே புறம்', 'வலிமைக்கு மார்க்கம்' மனம் போல் வாழ்வு' இவற்றை வெளியிட்டார். தம் நண்பர்க்கு, குடும்பத்தாருக்கு எழுதும் கடிதங்களெல்லாம் செய்யுள் வடிவிலேயே எழுதியனுப்பினார். 'மெய்யறிவு', 'மெய்யறம்' என்றவிரு ஒழுக்க நூல்கள் வெளியிட்டார்.

இன்று நாம் காணுகின்ற இலக்கண நூல்களில் தலை சிறந்தது "தொல்காப்பியம்." பழந்தமிழர் காலத்திய பண்பாடுகள் பலவும், தமிழ் மொழி அமைப்பு, மரபு, தொன்மை ஆகிய அனைத்தும் காட்டுவது அந்நூல். அப்பெரு நூலை நன்கு ஆய்ந்து தொல்காப்பிய எழுத்ததிகாரம், பொருளதிகாரம் ஆகியவற்றை இளம்பூரணர் உரையோடு பதிப்பித்தார். 'இன்னிலை' என்றதோர் நூலையும் பதிப்பித்தார்.


பல தமிழன்பர்கட்குத் தாமே ஆசிரியராக விருந்து பாடங் கற்பித்துள்ளார். அவ்வாறு பாடங்கேட்டவருள் நமது இராஜகோபாலாச்சாரி யாரும் ஒருவர். சிதம்பரனாரிடம் திருக்குறள்பாடங் கேட்டிருக்கிறார். பாடங்கற்பிக்குங்கால் விளங்கிய போதனைசெய்வதுடன் அதைக்கூடுமான அளவு தம் வாழ்வில் கடைப்பிடிக்குமாறு வற்புறுத்து வாராம். "ஆயிரத்துமுன் னூற்று முப்பது அருங் குறளும் பாயிரத்திேனாடுபகர்ந்ததற்பின்,போயொ ருத்தர் வாய்க்கேட்க நூலுளவோ" என்பதில் வன்மை கொண்டவர் நம் வ. உ. சி. இவரிடம் இருந்த தமிழ்ப்பற்றன்றோ இவரை எதனையும் ஏற்கச் செய்து வீரராக்கியது. இவரிடமிருந்த மொழிப்பற்றன்றோ நாட்டுப் பற்றாக மாறியது. தமிழ்மொழி வாழ்க!

காந்தியடிகள் கொள்கைமீது சிதம்பரனார்க்குப் பற்றில்லை. போரிடும் ஆற்றலற்ற முதியவர்கள் திட்டமே 'அகிம்சை' என்பதவர் கருத்து. ஆங்கி லேயரை அச்சுறுத்தியே விரட்ட வேண்டுமென் பது அவரது அவா. எனவே, காந்தியடிகளது அறப்போரில் பங்கு கொண்டாரில்லை. என்றாலும் 1927-ம் ஆண்டு சேலம் மாவட்டத்திலே நடை பெற்ற அரசியல் மாநாட்டில் தலைமை யேற்றார். அரியதோர் தலைமையுரை ஆற்றி வீரத்தை யூட்டினார்.

1936-ம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 18-ம் நாள் 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என்ற சொற்கள் வாய் சொல்ல, இவ்வுலகினின்றும் விடைபெற்றார். 1939-ம் ஆண்டு டிசம்பரில் சென்னை மாவட்டக் காங்கிரசுக் குழுவினர் அவரது முக உருவச்சிலை அமைத்து வணக்கம் செலுத்தினர். இன்று தூத்துக்குடிக்கும், சிங்களத்திற்கும் வ. உ. சிதம்பரம் என்று பெயர் தாங்கிய கப்பல், திரு. இராஜாஜி அவர்களால் தொடக்க விழாச் செய்யப்பட்டு ஓடுகிறது. தூத்துக்குடியில் இன்று வ. உ. சி. கல்லூரியொன்று வளர்கிறது. தமிழ்நாடெங்கும் வ. உ. சி. பெயரால் பல புத்தகசாலைகள், அறிவு வளர்ச்சிக் கழகங்கள் வைக்கப்பட்டுள்ளன.

"சிதம்பரனாரின் சொற்பொழிவும், பாரதியின் பாட்டும் கேட்டால் செத்தபிணம் உயிர்த்தெழும்! அடிமை நாடும் விடுதலை அடையும்! புரட்சி பொங்கும்" என்று அவரைத் தண்டித்த நீதிபதி 'பின்னே' யென்பாரே எழுதியிருந்தால், எல்லையற்ற அவரின் வீரம், எவரிடமுங் காணாத தமிழ்ப் பற்று, இன்னல்களை ஏற்றுக்கொள்ளும் மாண்பு, இத்தகைய தமிழ்ப் பண்பை எவர்தான் வரையறுக்கவியலும்?

பிறநாட்டுத் தமிழ்த்தொண்டர்



காஸ்டுவெல் ஐயர்

தோற்றுவாய்:

இற்றைக்குச் சற்றேறக்குறைய ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர், பலத்தீனு நாட்டினிலே (Palestine) அவதரித்தஏசுநாதர் "உலகரட்சகராக" உலகின் பெரும்பகுதியினரால் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளனர். ஏசுபெருமானின் பிறப்பு,வளர்ப்பு, தொண்டு, முடிவு, தெய்வீகத் தன்மை, அவதார நோக்கம், சொல்லிவைத்த அறவுரைகள் ஆகிய வற்றைப் பிறர்க்குணர்த்தி "யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பெருநோக்கொடு அவரது சமயத்தைப் பரப்பினர் மேல்நாட்டுப் பெருமக்கள் பலர். இந்திய நாட்டுக்கு இத்தாலி, இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி, ஸ்வீடன் ஆகிய நாடுகளிலிருந்து சமயத்தொண்டு மேற் கொண்டு வந்தவர்களை, சமயத் தொண்டர்கள் (Missionaries) என அழைப்பதுண்டு. இன்றுவரை அவ்வாறுள்ள அயல்நாட்டுச் சமயத் தொண் டர்கள் நம்மிடையே இருப்பதைக் காணலாம். அத்தகையோரிடம் அன்பு, அடக்கம், பொறுமை, இரக்கம், ஈகை ஆகிய அருங்குணங்கள்மிளிர்கின் றன. தொண்டொன்றினையே குறிக்கோளாகக் கொண்டு, எத்தகைய இன்னலையும் இனிவுடன் ஏற்றுக்கொள்ளும் அவர் தம் வாழ்வு வியப்பை யூட்டும். ஏசுபிரான் காட்டிய வழியைக் கடைப் பிடித்தும், அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி

யும் அவர் சொல்லிப்போன ஆணைகளை நிறைவேற்றியும் அரும்பாடு படுவர் இத் தொண்டர்கள். தீயவழி செல்லும் மக்களைத் திருத்தி நல்வழியிற்செலுத்தி, இறைவன் கருணையைக் காட்டுவதே இவர்களது வேலை. இத்தகைய பணியைச் சிரமேற்கொண்டு இந்தியாவுக்கு வந்த சமயத்தொண்டர் செய்துள்ள நன்மைகள் பலப்பல. தமிழ்நாட்டில் குறிப்பாகக் கல்விச் சாலைகளை நிறுவி மக்களைக் கல்வியறிவில் உயருமாறு செய்த பெருமை அவர்களையேசாரும். நடுநிலை நோக்கொடு பார்க்கும் எவரும் இதை ஒப்புக்கொள்வர். தவிர, பிறநாட்டிற் பிறந்தும் அன்னார் பலர் இங்கு வந்து நந்தாய்மொழியாம் தமிழ்மொழியைக் கற்று, அத் தமிழிலுள்ள இலக்கிய, இலக்கணங்களைப் படித்தறிந்து, அதன் உயர்வை உணர்ந்து, தாங் கண்ட உண்மையை உலகத்தார்க்கு எழுத்துவடிவில் என்றைக்கும் இருக்குமாறு எழுதிச் சென்றுள்ளனர். அதனையும் தம் திருத்தொண்டாகவே கருதினர். இவர்களையும், இவர் தம் வாழ்வினையும் நாம் அறிந்து கொள்வது தமிழன்னைக்குச் செய்ய வேண்டிய கடப்பாடாகும். அத்தகைய பிற நாட்டு நல்லறிஞருள் கால்டுவெல் ஐயர் என்ற பெரியாரும் ஒருவர். இவர் செய்த பெருந் தொண்டு ஏனையோர் செய்தவற்றைக் காட்டிலும்

சிறந்தது. இவர் பல மொழிகளினாராய்ச்சியி லீடுபட்டுத் தமிழ் மொழியை ஏனைய மொழிக ளுடன் ஒப்பிட்டு இதன் உயர்வை உள்ளது உள்ளபடியே உலகுக்கெடுத்துக்காட்டிய உயர்ந் தோர். ஆதலின், இவரது வரலாறு அனைவரும் அறிந்துகொள்ள வேண்டியது இன்றியமை யாதது.

இளமையும் கல்வியும்:

உலகப் படத்தை உற்றுக் கவனித்தால் ஐரோப்பாக் கண்டத்தில் பிரிட்டன் தீவுகளில் இங்கிலாந்து, அயர்லாந்து, ஸ்காட்லாண்டு என்ற மூன்று நாடுகள் காணலாம். அயர்லாந்து அழ கியதோர் நாடு. ஆங்குக் கிளாடி என்னும் ஆறு ஒன்று ஓடுகிறது. அவ்வாற்றின் கரையினிலே அமைந்துள்ளது ஒரு சிற்றூர். அவ்வூரின்கண் ராபர்ட் கால்டுவெல் என்பார் 1814-ல் பிறந்தார். 'அகத்தினழகு முகத்தில் தெரியும்' என்பதற் கேற்ப சின்னஞ்சிறு குழந்தையாக விருக்கும் போது அவரது முகப் பொலிவு பிற்காலத்தில் பெருமகனாக விளங்கும் அறிகுறி காட்டியது. பத்தாண்டுகள் முடியும்வரை அயர்லாந்திலேயே வளர்ந்து வந்தார். பின்பு பெற்றோர் அவரது தாய் நாடாகிய ஸ்காட்லாந்திற்குச் செல்லவே

இவரும் அன்றுமுதல் அங்கே வசித்து வந்தார். ஆங்குச்சென்று பள்ளியிற் சேர்ந்து ஆறுவருட காலம் கல்வி கற்ருர். இவர் பதினுரும் ஆண்டுக் குள்ளேயே இலக்கண இலக்கிய நூல்களை ஒருங்கே ஆய்ந்து தெளிந்த அறிவை அடைந் தார்.

தந்தையாரின் விருப்பமோ, தம் மைந்தனைச் சிறந்த ஓவியக்காரனுக்க வேண்டுமென்பதே யாகும். ஆதலின், அயர்லாந்தின் தலைநகராகிய டப்ளின் நகரத்திலுள்ள கவின்கல் லூரியில் சேர்க் கப்பட்டார். ஓவிய மென்பதும் காவிய மென்ப தும் ஒன்றேயாகும். இயற்கையின் நுண்ணிய பொருட்களெல்லாம் சித்திரமாக வரைகின்ருன் ஓவியக்காரன். அவற்றையே எழுத்துக்களிலே காட்டுகின்ருன் காவியக்காரன். காவியமும் ஓவிய மும் அவ்வளவு நெருங்கிய தொடர்புள்ளவை.

எனவே, காவியங்களிலே கூரிய அறிவைப் பெற்றிருந்த கால்டுவெல் ஓவியத்திலும் சிறந்து விளங்கினுர். அவ்வோவியக் கலையில் தேர்ச்சி பெற்றுப் பரிசுகள் பல பெற்ருர்.

எனினும், அவரது மனம் எப்போதும் வேருென்றினையே நாடி நின்றது. உன்னத இறைவனை ஓதி உணர்ந்து, அவரது அன்பின் வழியை அனைவர்க்கும் அறிவிக்க வேண்டும் என்னும் ஆவலே அவருள்ளத்தில் ஆழ்ந்து

நின்றது. மக்கள் நல்வழியைக் கடைப்பிடிக்குமாறு ஆற்றும் தொண்டே சிறந்ததெனக் கருதினர். அதற்கேற்பத் தன் இருபதாம் வயதில் இலண்டன் மாநகரிலிருந்த சமயத் தொண்டர் கழகத்தில் சேர்ந்தார். அதன் கிளையாகவிருந்த கிளாஸ்கோ பல்கலைக்கழக மாணவராஞர். ஐரோப்பிய நாட்டுத் தொன்மொழிகளில்,அமைந்திருந்த சமய நூல்கள், நீதி நூல்கள், அனைத்தையும் தெளிவாகக் கற்ருர்.

சர். டேனியில் சென்ட் போர்டு என்னும் பேராசிரியர், அப் பல்கலைக்கழகத் தலைவராயிருந்தார். அவர் பல்வேறு மொழிகளான லத்தீன், கிரீக்கு, ஜெர்மன் ஆகியவற்றில் சிறந்த ஆராய்ச்சியறிவைப் பெற்றிருந்தமையால், ஒரு மொழியைப் பிற மொழிகளுடன் ஒப்பிட்டு ஒற்றுமை வேற்றுமை, உயர்வு தாழ்வு காட்டிக் கற்பிக்கும் ஆற்றலுடையவராய்த் திகழ்ந்தார். எனவே, கிரீக்கு மொழியின் உயர்வைப் பிற மொழிகளுடன் ஒப்பிட்டுக் கற்பித்து வந்தார். இதனைக்கண்ட கால்டுவெல் சொல்லமுடியா இன்பம் எய்தினர். "செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம் செல்வத்துளெல்லாம் தலை" என்ற வாக்குஉண்மையன்றே! பிற்காலத்தில் தமிழ்நாடு வந்தபோது தமிழ்மொழியைப் பிறமொழிகளுடன் ஒப்பிட்டு உண்மை உணர்வதற்கு ஊன்றுகோலாக நின்றது இவ்வறிவு.

தமிழ்நாட்டு வாழ்வு:

இலண்டன் மாநகரிலிருந்து தமிழ் நாட்டில் கிறித்தவத்தொண்டு இன்றளவும் நடைபெறுகிறது. பத்தொன்பதாம் நூற்ருண்டின் மத்திய பாகத்தில் கிறித்தவக் கழகத்திலிருந்து இத்தமிழ் நாட்டிற்குச் சிலர் சமயத் தொண்டுக்காக அனுப்பப்பட்டனர். அவ்வாறு தொண்டுக்குத் தெரிந்தெடுக்கப்படுபவர் ஒழுக்கத்திற் சிறந்தவராயும், சமய நூலாராய்ச்சியுடையவராயும் இருத்தல் வேண்டும். நம் கால்டுவெல் என்பார் இவ்விரண்டிலும் சிறந்தவராயிருந்தமை பற்றிக், கழகத்தார் இவரைத் தெரிந்தெடுத்துத், தமிழ் நாட்டில் தொண்டுபுரியுமாறு அனுப்பினர். 1838-ம் ஆண்டில் கப்பலேறினுர். புறப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்கள் கப்பலிலேயே பயணச்செய்து சென்னைக்கு வந்து சேர்ந்தார். இக்காலை கப்பற் பயணத்திற்கும், அக்காலை கப்பற் பயணத்திற்கும், கடக்க வேண்டிய தொலைவில் வேறுபாடு இருந்தது. குறுகிய பாதைகள் கண்டுபிடிக்கப்படாத காலம் அது. ஆதலின் நான்கு மாதங்கள் கப்பலிலேயே காலங்கழிக்குமாறு நேர்ந்தது. அக்கப்பலில் இவருடன் பயணஞ்செய்த சி. பி. பிரௌன் என்னும் ஆங்கில நட்பினர் ஒருவருடன் பழகினுர்.

'ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே' என்பது ஆன்ருேர் வாக்கன்ருே? இருவர்க்கும் நட்பு வளர்ந்தது. அந்நட்பின் பயனுய் பிரௌன் என்பார் கால்டுவெல்லுக்கு மொழிகற்பிக்க முற்பட்டார். பிரௌன் என்பார் சென்னே அரசாங்க அலுவல் தொடர்புடையவர். அன்னூர் வடமொழியும் ஆந்திரமும் நன்கு தெரிந்தவர். இவ்விரண்டையும் கால்டுவெல்லுக்குச் செவ்வனே விளக்கிப் பயிற்றுவித்தார்.

இவர் சென்னே வந்திறங்கிய காலத்தில், ஆங்கு, துருவர் ஐயர் (Rev. Drew) என்னும் ஐரோப்பியரொருவர் தமிழ்ப்புலமை வாய்ந்தவராய் விளங்கினூர். தமிழ்ப்பெரு நூலாகிய திருக்குறளே ஆங்கிலத்தில் அவர் மொழி பெயர்த்துக் கொண்டிருந்தார். திருக்குறள் செந்தமிழ் மொழியாலாகிய தோர் நூல். நவில்தொறும், நவில் தொறும் நூல் நயம் புதிய முறையில் வேண்டுவார்க்கெல்லாம் விதம் விதமாய்க் காட்டுமொரு பெரு நூல். அந் நூலுக்கு முடிவான உரை கண்டாரெருவருமிலர். இன்றுவரை அவரவர் தம் உள்ளக் கருத்துக்கேற்ப உரை செய்து கொண்டேயுள்ளனர் பலர். இத்தகைய நூலின் கருத்தையறிந்து அதனேத் தன்னுடைய தாய் மொழியாம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்

துருவர் ஐயர். (Rev. Drew) அத்தகைய பெரியாரின் வீட்டில் நம் கால்டுவெல் தொண்டர் விருந்தினராகத் தங்கினுர். அந்நாளில் சென்னை மாநகரில் சமயத் தொண்டுக்காக வந்திருந்த மேனுட்டார் பலர், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய தென்னிந்திய மொழிகளை முயன்று ஆய்ந்து அரிய உண்மைகளைக் கண்டனர். அவருள் தமிழ்மொழிக்குத் தொண்டு செய்தலே தம் வாழ்வெனக்கொண்டார் 'போப்' பென்னும் பெருமகன். 'பவர்' என்னும் பெரியார் கிறித்தவ முதல்நூலாகிய பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்தார். ஆங்கிலக் கல்விச்சாலை ஒன்றை நிறுவி ஏசுநாதரின் அன்பை மக்களுக்குக் காட்ட முற்பட்டார் 'ஆண்டர்சன்' என்ற அறிஞர். இன்னோரன்ன பெரியார்களையெல்லாம் பழகி, தமிழறிவை வளர்த்துக்கொள்ளும் பேறு பெற்ருர் நம் கால்டுவெல் தொண்டர். கற்ருரைக் கற்ருரே காமுறுதல் இயல்பன்ருே?

சென்னையில் வசித்த மூன்ருண்டுகளின் முடிவில் கிறித்தவக் குருப்பட்டம் சூட்டினர் நம் கால்டுவெல் தொண்டருக்கு. இனி இவரைக் கால்டுவெல் ஐயர் என அழைத்தலே முறையாகும். இவ்விதப் பக்குவ நிலையடைந்த பின்னர்

தாம் செய்யப்புகும் பெருந்தொண்டுக்குத் தக்க தோர் இடமான பாண்டி நாட்டுக்குக் கிளம்பினர். சென்னைக்கும் திருநெல்வேலிப்பதிக்கும் நானூறு கல் தொலைவுக்கு மேலேயே உள்ளது. நம் ஐயர வர்கள் இங்கிருந்து அப்பாண்டி நாடு சென்ற டையத் தெரிந்து கொண்டவழி வியக்கத்தக்கது. இதுவரை எவரும் செய்திராதது. தனக்கென யாதொருவித வாகனத்தையும் ஏற்பாடு செய்து கொள்ளாமல், இந்நீண்ட தூரத்தைக் காலால் நடந்தே செல்வதென முடிவுகொண்டார். பலத் தீன நாட்டின் பாகங்களாகிய கலிலேயா, யூதேயா சமாரியா ஆகிய நாடுகளிடையே ஊழியஞ் செய் வதற்குக் கால்நடையாகச் சென்று திரிந்த ஏசு நாதரின் வாழ்வை நன்குணர்ந்த நம் ஐயரவர்கள், அதே வழியைத் தாமும் கைக்கொண்டார் போலும்! என்னே இவரது மனவன்மை! நண் பரிடம் விடைபெற்று நடக்கத் தொடங்கினர். காலையும் மாலையும் கடுவழி கடந்தார். ஆங்காங்கு இயற்கையன்னையின் எழில் கண்டு இன்பமுற்றார். சோழநாடு வந்தடைந்தார். வற்றாவளங் கொழிக் கும் காவிரியைக் கண்டு களித்தார். இன்று மாய வரம் என மக்கள் அழைக்கின்ற மயூரம் என்ற மயிலாடுதுறை வழியாகக் கடலருகேயுள்ள தரங்கம் பாடி சேர்ந்தார். தரங்கம்பாடி என்னும் தமிழ்ப்

பெயரின் பொருள் ஆய்ந்து, கடலருகே அமைந்துள்ள இவ்வூருக்குப் பெயர்ப் பொருத்தத்தையறிந்து தமிழ் மக்களை வாழ்த்தினர். பின்னர் தஞ்சை சென்றடைந்தார். கிறித்தவப் பாவலரும், நெல்லையிற் பிறந்து தஞ்சையிற் குடியேறியவருமான வேதநாயகரைக்கண்டு, அவரியற்றிய இனிய தமிழ்க் கீதங்களைக் கேட்டு மகிழ்ந்தார். தஞ்சையில் சிவன் கோயிலமைப்பினையும், திரிசிரபுரக்குன்றின் அழகினையும், திருவரங்கப்பெருமான் கோயிற் சிறப்பினையுங் கண்டுகளித்த பின்பு நீலகிரி சென்றடைந்தார். அத்தியட்ச குருவான ஸ்பென்சரவர்களில்லத்தில் ஒரு திங்கள் வரை தங்கினர். சோழநாட்டின் மருத நிலவளம், தரங்கம்பாடியின் நெய்தல் நிலவளம், நீலகிரியின் குறிஞ்சி நிலவளம் ஆகிய மூவளங்களும் ஐயரவர்கள் உள்ளத்தைக் கவர்ந்தன.

ஓய்வுக்குப் பின், நீலகிரியினின்றும் புறப்பட்டு கோயமுத்தூர் சென்று ஆங்கிருந்து மதுரை நோக்கி நடந்தார். போகுமிடமெங்கும் புதுமைகளைக் கண்ணுற்றும், எளிய இந்திய மக்கள் வாழ்வையும் கண்டு உவப்பு எய்தினரேனும், கல்வி செவ்வனே பரவாமல், அறியாமையில் மக்கள் மூழ்கிக் கிடத்தலைக்கண்டு மனம் புழுங்கினர். நம் ஐயரவர்கள் கால் நடைப்பயணத்

தால் அடைந்த கடினமொருபுறமிருக்க, பிறநாட்டு மகன் என்ற வேற்றுமைஉணர்ச்சியால், சின்னஞ் சிறு கிராமங்களில் பட்ட அவதிகள் சொல்ல முடியா. 'தொல்லை வினையால் துயருற்றுச் செல்லும் பரங்கி' எனவும், 'வண்டியேறிச்செல்ல வகையற்ற வெள்ளைக்காரன்' எனவும் பலர் இகழ்ந் தனர். ஒரு நாள் ஒரு குக்கிராமத்தில் தங்க நேரிட் டது. திடீரெனப் பெய்த மழையால் ஐயரவர்கள் முழுதும் நனைந்து விட்டார். இருக்க இடம் கொடுக்க முடியாதென இயம்பினர் கிராம மக்கள். மாட்டுத் தொழுவொன்றைக் காட்டி அதில் படுத் துறங்கச் சொன்னார்கள். ஐயரவர்கள் மனம் இசையவில்லை. ஓர் அடைபட்ட வீட்டின் புறத் திண்ணையில் படுத்துறங்கி, ஆண்டவன் கரு ணையை வியந்தார். நன் மொழியும் இன்மொழி யும் கூறி நன்னெறியைக் காட்ட வந்த ஏசுநாத ரையே சொந்தநாட்டு மக்கள் சூழ்ந்துபழிவாங்கிச் சிலுவையில் அறைந்து கொன்றனர் என்றால், வேற்று நாட்டு மகன் கால்டுவெல் ஐயரவர்களைத் திட்டியதிலும், இடங்கொடுக்காது தவிக்கவிட்ட திலும் வியப்பொன்றுமில்லை. ஐயவரவர்கள் எல் லாத் துன்பங்களையும் சகித்து மதுரைவந்தடைந்

தார். மதுரையின் மாண்பைக்கண்டு மகிழ்ந்தார். மீனுட்சி திருக்கோயில், திருமலைநாயக்கர் மகால், ஆகியவற்றைப் பார்த்தார். தமிழ் பிறந்து வளர்ந்தது மதுரையெனவறிந்து மனமுவந்தார். மதுரை விட்டுத் திருமங்கலம் சென்று ஆங்கு வசித்து வந்த டாக்டர் திரேசி ஐயர் என்ற அமெரிக்க நாட்டுச் சமயத் தொண்டருடன் பழகினுர். மங்கம்மா சாலை வழியாக நடந்து திருநெல்வேலியடைந்தார். பொருநையாற்றின் பொழில்களையும், எழிலையும் கண்டு மகிழ்ந்து, அதைக் கடந்து பாளையங்கோட்டை சென்ருர். ஆங்கு வாழும் கிறித்தவர்கள் அன்புமிகும் நல்வரவு கூறி அகமகிழ்ந்து இன்பக்கண்ணீர்காட்டி வரவேற்றனர். பின்னர் நாசரேத்தென்னும் நல்லூர் சென்ருர். அவ்வூரினர் விருப்பிற்கிணங்க 1841 நவம்பர் 28.ம் நாளில் 'கங்குல் கழிந்தது, கதிரொளி எழுந்தது' என்ற பொருளின்பேரில் ஒரு சொற்பொழிவு ஆற்றினுர். இதுவே இந்தியாவில் இவரது முதற் சொற்பொழிவு. அருகிருந்த முதலூர் சென்று, பின்னர் தன்னிருப்பிடமாகத்தெரிந்துகொண்ட இடையன்குடி வந்தடைந்தார். இவ் விடையன் குடியிலேயே அவரது நீண்டகால ஊழியம் நிறைவேறியது.

சமயத் தொண்டும் தமிழ்த் தொண்டும் ஒருங்கே ஆற்றத் தம்மிருக்கையாகத் தெரிந்து கொண்ட இடையன்குடி, மிகச்சிறிய ஊர். அவ்வூர் சுகாதாரம், குடியிருப்பு, தண்ணீர் ஆகியவற்றில் மிகவும் குறைபாடுடையதாகக் காணப்பட்டது. 'முயற்சி திருவினையாக்கும்' என்பதை முன்னரே அறிந்தவரும், 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பதைத் தம் வாழ்வின் இலக்காகக் கொண்டவருமாகிய கால்டுவெல் ஐயரவர்கள், அச்சிற்றூரினைச் சீர்திருத்த முற்பட்டார். கிராமத்தின் பல விடங்களில் கிணறுகள் வெட்டினார். தெருக்களைத் திருத்தி அமைத்தார். வாழுகின்ற சிறு வீட்டில் வளம்பலவும் இருக்குமாறு வகுத்துப் புதுக்கினார். அவ்வூர் மக்களைத்தட்டி எழுப்பி இத்தகைய திருத்தங்களை அவர்களும் செய்யுமாறு செய்தார். ஊர் நடுவே கோவிலொன்று எடுக்க உழைத்தார். ஆங்கிலேய நாட்டினுக்கெழுதி கோவிலின் அமைப்புப் படம், கட்டுவதற்கு வேண்டிய பொருள் ஆகியவற்றை வரவழைத்தார். அவ்வூர் மக்களின் அறியாமையைப் போக்குவான் வேண்டி ஆண் பெண் ஆகிய இருபாலார்க்கும், தொடக்கப் பள்ளிகள் தொடங்கினார். பெண் மக்கள் கல்விக்குப் பெரிதும் எதிர்ப்பு இருந்தும், பெண் கல்வியினுயர்வையும், பயனை

யும் அம்மக்களுக்கு விளக்கிச் சொல்லி, அவ்வூரி லுள்ள பெண் குழந்தைகளனைவரும் அப்பள்ளி யிற் சேருமாறு செய்தார். கோயில் கட்டிமுடியப் பல ஆண்டுகள் ஆயின. கல்வியில் அவ்வூர் சிறந்து விளங்கியது. இத்தகைய முன்னேற்றங் களையும், ஐயரவர்கள் சுற்று வட்டாரத்திடை ஆற்றிவருந் தொண்டினையும் காண்பதற்காக அக் காலை கவர்னராகவிருந்த லார்டு நேப்பியர் என் பார், தம் மனைவியார், பரிவாரங்களுடன் இடை யன்குடி வந்தார். ஒரு வார காலம் ஐயரவர்களு டன் தங்கி அவரது திருப்பணிகளை அறிந்து, உழைப்பின் உயர்வைப் புகழ்ந்து போற்றினரெ னின் அதனில் வியப்பொன்றுமில்லை. இடையன் குடியும் அதன் சுற்றுப் புறங்களும், ஐயரவர்கள் விடாமுயற்சியுடனாற்றிய அருந்தொண்டினால் ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தன.

கலைத் தொண்டு:

'யாதும் ஊரே யாவருங்கேளிர்' என்னும் முது மொழியை மெய்ப்பித்த கால்டுவெல் ஐயரவர்கள் வெப்பம்மிகுந்த இடையன்குடியைத் தம்மிருப்பிடமாகக்கொண்டமையால், ஆண்டுக்கு ஒன்பது மாதமளவும் கடுவேனில் தாங்காது உடல் வருந்தினர். எங்கு பார்க்கினும் செக்கச் செவே

லெனப் பரந்துகிடந்த மணற் றிட்டுகளான அந் நாட்டை தேரி நாடு என்பர். அக்குறுமணலின் செந்நிறம் அவர் கருத்தை இழுத்தது. அம்மண் ணில் ஒரு சிறிது எடுத்து வீயன்ன நகரக்காட்சி சாலைக்கு அனுப்பினர். ஆங்கு அம்மண்ணின் தன்மை ஆராயப்பட்டு, உலகின் எப்பகுதியிலும் இத்தகைய மண் கண்டதில்லை என முடிவு செய் யப்பட்டு, அம்முடிவு ஐயரவர்கட்குத் தெரிவிக்கப் பட்டது. தமிழ் நாட்டின் மண்ணுக்குக் கூடத் தனிச் சிறப்பு உண்டெனக் காட்டினர் நம் ஐயரவர்கள்.

குளிர் மிகுந்த நாட்டினிலே பிறந்து, தொண் டாற்றும் கடமை யுணர்ச்சியால் வெப்பம் மிகுந்த தேரி நாட்டில் வாழ்ந்த இவர், பழந்தமிழ் நூல் களை ஆராயத் தலைப்பட்டார். திருக்குறள், சிந் தாமணி, நன்னூல் ஆகிய தமிழ் இலக்கிய இலக் கண நூற்கள் அவருக்கின்பம் தந்தன. பழந் தமிழின் திட்ப நுட்பங்களைத் தெளிவாய் அறிந் தார். "தொட்டனைத் தூறும் மணற்கேணி, மாந் தர்க்குக் கற்றனைத்தூறும் அறிவு" என்பது மெய் யாயிற்று. ஆண்டுக்கொருமுறை அருகிலமைந் துள்ள, குற்றால நீர்வீழ்ச்சிக்குச் சென்று, குளிர் காற்றுப் பெறுவது வழக்கம். திரிகூட மலையில் உற்பத்தியாகி, மலை வழியே நெடுந்தூரம் ஓடி,

நூறடிக்கு மேற்பட்ட உயரத்தினின்றும் வீழ்கின்ற அருவியைக்கண்டார். இந்நீரருவியினின்று விழுகின்ற நீர் பல மூலிகைகளிற் படிந்து வருவதால் உடலுக்கு நலன் தருகின்ற உயர்வுடையது எனத் தன் கருத்தைத் திருநெல்வேலி ஜில்லா வரலாற்றில் எழுதி வைத்துள்ளார்.

நாற்பதாண்டுகளாக இடையன்குடியில் வாழ்ந்துவந்த கால்டுவெல் ஐயரவர்கள் காட்டிய கிறித்தவவழி மக்கள் மனதைக் கவர்ந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் இவ்வழியில் இறங்கினர். தமிழ்க்கிறித்தவர்கள் தம்தெய்வ வணக்கத்திற்குப் பயன்படுமாறு ஒரு வணக்க நூல், செய்பவேண்டியிருந்தது. வேற்று நாடுகளிலிருந்து ஈண்டுப் போந்திருந்த அறிஞர் பலர் இவ்வேலைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டனர். அக்குழுவில் நம் ஐயரவர்களுமொருவர். இவரே அப்பணியிற் சிறந்த பங்கு கொண்டார்.

கிறித்தவர்களின் ஒரே வேத நூல் விவிலிய நூலாகும். (BIBLE) அஃது இரு பெரும் பகுதிகளைக் கொண்டது. கிறித்து நாதர் இவ்வுலகிற்கு வருமுன்னர் நிகழ்ந்தவை யனைத்தும் சொல்லியுள்ளதைப் 'பழைய ஏற்பாடு' என்பர். அவர் வந்தபின் அவரது வாழ்வு, அவரது அறிவுரைகள்

அவரைப் பின்பற்றிய ஞானிகள் எழுதியுள்ள உண்மைகள் ஆகியவை அடங்கியதைப் 'புதிய ஏற்பாடு' என்பர். இவ்விரண்டும் அடங்கியதே விவிலியமாகும். முதன்முதலாக எபிரேய மொழியாலாக்கப்பட்டு, பின்னர் கிரேக்க மொழிக்குத் திருப்பப்பட்டு, அதன்பின் ஆங்கிலத்திற்குக் கொண்டுவரப்பட்டது. ஆங்கிலத்தினின்று தமிழ் மொழி பெயர்ப்பு ஒன்று செய்ய வேண்டிய பணி இருந்தது. தமிழ் நாட்டுமக்கள், வேதமெனினும் தம் தாய்மொழியில் படிக்கவன்றோ விரும்புவர்? எனவே சென்னைமாநிலமுழுமைக்கும்அந்நாளில் தலைமையாயிருந்த அத்தியட்சகுரு, தமிழ் நாட்டில் வாழ்ந்து வந்த, பல மேனாட்டுத் தமிழறிஞர் உதவியை நாடினர். அவர்கட்கு அப் பணி அளிக்கப்பட்டது. மேனாட்டுத் தமிழறிஞர் பன்னிருவர் அப்பணியிலிறங்கினர். பத்தாண்டுகள் வரை அப்பணி தொடர்ச்சியாய் நடைபெற்றது. பன்னிருவரில் மூவரே சிறந்த தொண்டாற்றினர். அம்மூவருள் தலையாய தொண்டு புரிந்தவர் நம் கால்டுவெல் ஐயரவர்கள் எனின் வியப்பொன்றுமில்லை. மொழிபெயர்க்கும் தொழிலில் ஈடுபட்டுக் கிடந்த ஐயரவர்கள், தம்மை வேத அறிவிலேயே பத்தாண்டுகள் கழிக்குமாறு செய்த இறைவன் திருவருளைப் புகழ்ந்து போற்றித் துதித்தார்.

இனித் தமிழகத்தின் தொன்மையையும், தமிழ் மொழியின் பழமையையும் துருவித் தேடினுர். பைந்தமிழ் நாடு இவ்வுலகப் படைப்புக்காலந்தொட்டு வருவதென்று, முன்னேர்கள் பலர் சொன்ன கதைகளைக் கருத்துடன் கேட்டறிந்தார். கடற்கரை ஓரத்திலமைந்து தூர்ந்து கிடந்த சிற்றூர்களையும், பழங்காசுகளையும் ஆராய்ந்தார்.வணிகத்தொழில் நடாத்திய யவனர், பினீசியர் ஆகியோர் தமிழ்நாட்டைப்பற்றி எழுதி வைத்த குறிப்புகள் அவருக்குதவின. பழந்தமிழகத்தின் அங்கங்களாயமைந்த முந்நாடுகளையறிந்தார். பழம்பதியாம் பாண்டிநாட்டின் பண்பினையும் சோழநாட்டின் வளமையையும், சேரநாட்டின் விளைபொருள்களையும். இம்மூன்று நாடுகளின் துறைகளையும் அறிந்தார். பழந்தமிழர் கடல் கடந்து செய்த வாணிபம் அறிந்து மகிழ்ந்தார். குறிஞ்சி, முல்லை, பாலை,மருதம், நெய்தல் எனத் தமிழர் நிலப்பிரிவுகள் செய்து வைத்தமையும், அந்நிலங்களிடைக் கிடைக்கும் விளைபொருள்களையும் பார்த்துக்களித்தார். முப்பெரும் பிரிவுகளில் ஆட்சி செய்த மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள் அவர் ஆட்சித்திறன், ஆகியவற்றைப் பழந்தமிழ் நூல்களினின்றும் படித்தார், இவ்வாருகப் பல ஆராய்ச்சிகளில் கருத்தைச்செலுத்திய கால்டுவெல் ஐயரவர்கள், கொற்கை நாட்டில்

பூமிக்குக்கீழ் உள்ள பகுதிகளையும் தோண்டி ஆராய்ச்சிசெய்து அதினின்றும் தாங்கண்ட பழந் தமிழ் நாட்டையும் எழுதியுள்ளார். இவ்விதமாக ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே, வளஞ்செறிந்து வாணிகத்திலுயர்ந்த தமிழகத்தை உலகுக்கு எடுத்துக்காட்டினர். சிங்களம், புட்பகம், சாவகம் ஆகிய தீவுகளிலும், காழகம் முதலிய வள நாடுகளிலும் தமிழ் மக்கள் குடியேறியதை எழுதினர். நாற்றிசையும் சென்று நற்றொழில் புரிந்து பொருளீட்டி நல்வாழ்வு நடத்திய தமிழர் வலிமையையும் அறச் செயலையும் கண்டு தமிழருக்குக் "கீழ்நாட்டுக் கிரீக்கர்" என்ற பெயர் சூட்டிப் பெருமைப்படுத்தியுள்ளார் கால்டுவெல் ஐயரவர்கள்.

தமிழ் மொழியின் உயர்வு காண விரும்பிய கால்டுவெல் ஐயரவர்கள், அக்காலையில் ஆங்காங்கே வாழ்ந்து வந்த ஜெர்மன் பாதிரிகள் எழுதிவைத்த மொழியாராய்ச்சிகளனைத்தையும் படித்தார். மொழிகளின் வேர்ச்சொற்களை ஆய்ந்து தெளிந்தார். மொழிகளின் ஒற்றுமை, வேற்றுமைகளை வேர்ச்சொற்களோடு ஒப்பிட்டார்.

'கருத்து வைத்து நற்கல்வியை
அருத்தியாய்ப் படித் தறிவிலே
விருத்தியாய் உனை மேவவே
திருத்துவாய் எனத் தேசிகா'

('இரட்சணியமனோகரம்')

என்ற வழிபாட்டுடன், இரவுபகல் இறைவனருள் வேண்டிப் பதினைந்தாண்டு காலம் படித்துவந்த இவருக்கு மொழிகளில் நுண்ணிய அறிவு வாய்த்தது. எனவே, தென்னிந்தியாவில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம், குடகு எனப்படும் ஆறு திருந்திய மொழிகள் உண்டு எனவும், துதம், கோதம், கோண்டு, கந்தம் அல்லது கு, இராஜ்மகால், ஒராவோன் ஆகிய ஆறு திருந்தா மொழிகளுண்டு எனவும் முடிவு செய்தார். தாங்கண்ட முடிவுகளனைத்தும் திரட்டி "தென்னிந்திய மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற அரியதொரு நூலை வெளியிட்டார். இந்த விதமானதொரு நூல் இவருக்கு முன்னர் எவரும் செய்ததில்லை.

தமிழ் மக்களோ, வேற்று நாட்டாரோ இவ் விதமான ஒப்பிலக்கணம் செய்ய முயற்சித்ததும் இல்லை. எனவே இவரது நூல், ஆராய்ச்சித் துறையில் முதல் நூலாக விளங்கியது. இவர் தென்னிந்திய ஒப்பிலக்கணம் வெளியிட்ட பின்னர், பலர் இவரைப் பின் பற்றி தாம் வாழ்ந்த பல்வேறு நாட்டிடையே காணப்பட்ட மொழிகட்கு ஒப்பிலக்கணம் செய்தனர். ஆதலின் இத் துறையில் இவரே வழி காட்டியவர் ஆவர். இத்தகைய அறிஞர் எழுதிவைத்துச் சென்ற

நூல்களினாலன்றோ தமிழ் மொழியின் மரபு, தொன்மை, உயர்வு ஆகியயாவும் உணரமுடிகிறது. இத்தொண்டுக்கு வழி வகுத்த கால்டுவெல்ஐயரவர்களின் பெயர் இந்நாட்டில் என்றும் நின்று நிலவுவதாக.

இனி, அவர் எழுதியவற்றில் ஒரு சில அரிய உண்மைகள் யாவருங் காணக்கிடக்கின்றன. மலையாளம் தமிழொடு நெருங்கிய தொடர்புடையது. ஆயினும் பிற்காலத்தில் வடமொழியொடு மிகவுங் கலந்து, முற்கால மலையாள மொழியினின்றும் வேறுபட்டுவிட்டது. அவ்வாறே தெலுங்கும், கன்னடமும் வடமொழிகளை மிகவும் ஏற்றுத் தனித்தியங்கும் ஆற்றல் இழந்தன. தமிழ்மொழியோவெனில், வடமொழி வந்து கலந்ததெனினும், அவைகளை நீக்கிவிட்டுத் தனித்தியங்கும் ஆற்றல் உள்ளது மட்டுமின்றி எவ்வித பிற உதவியுமின்றி வளரவுங் கூடும்.

உலகில் எம்மொழியிலும் இல்லாத உயர்திணை, அஃறிணைப் பாகுபாடுகள் தமிழ் இலக்கணத்தில் மட்டுமே உண்டு என எழுதியுள்ளார்.

திருக்குறளில் கையாளப்பட்டுள்ள தமிழ்ச் சொற்கள் உயர்ந்தவை மட்டுமின்றி மிக மிகத் தொன்மைவாய்ந்த தூய தமிழ்ச் சொற்கள் எனக் காட்டியுள்ளார். திருக்குறளிலுள்ள சொற்களில்

ஒரு சில, வடமொழிச் சொற்கள் என வாதிப்பாரும் இன்றுளர்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே எழுதியதொரு நூலில், ஆக்கியோன் திறனறிந்தும், தமிழில் போதியசொற்களின்றி வேற்றுமொழிச் சொற்கள் கலந்து திருவள்ளுவர் குறள் செய்ததாகச் சொல்லப்படுமானுல் கால்டுவெல் ஐயரவர்கள் போன்ற அறிஞரது ஆராய்ச்சியை என்னென்பதோ?

இத்தென்னிந்திய ஒப்பிலக்கணம் வெளிவந்த பின்னர், மொழிநூல் உலகினுக்கே புது வழியைக் காட்டிய இவரைப் பலரும் பலபடப் பாராட்டினர். கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தார் ஐயரவர்களுக்கு 'டாக்டர்' பட்டம் அளித்து அவர் தொண்டினைச் சிறப்பித்தனர்.

'ஒன்ரு உலகத்து உயர்ந்த புகழல்லால் பொன்ருது நிற்பதொன்று இல்' என்ற குறட் கருத்து மெய்யன்ரே?

இல்லற வாழ்க்கை:

'அந்தி சந்தி இராப்பகல்
சிந்தை யாரவுன் சேவடி
வந்தனஞ் செய்து வாழ்வாம்
தந்திரட்சி சர் வேசனே' (மனோகரம்)

என்ற வழிபாட்டில் ஊன்றிய கால்டுவெல் ஐயரவர்கள் இடையன்குடியை இருப்பிடமாகக் கொண்டு ஆற்றிய சமயத் தொண்டு மிக வளர்ந்தோங்கியது. ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இப்புதிய சமயத்தில் புகுந்தன. இறைவனை எளிதிற் பற்றிக்கொள்ளும் வகையில் நன்னெறி போதிக்கப்பட்டு வந்தமையால் அவர்கள் மனம் மாறி ஏசு பெருமானைத் தஞ்சமென்றண்டினர். ஐயரவர்களின் இத்தொண்டினையறிந்த சென்னை மாநில அத்தியட்ச குரு 1877-ம் ஆண்டில் இவரையும் ஓர் அத்தியட்ச குருவாக ஆக்கினர். மக்கள் மனங்குளிர்ந்து ஐயரவர்களை வாழ்த்தினர். தென்னிந்தியாவின் தெற்குக்கடைசியில் வாழ்ந்த மக்களுக்குக் கல்வியறிவூட்ட விரும்பினர் ஐயரவர்கள். ஆதலின் இங்கிலாந்துக் கெழுதி பணவுதவி பெற்றுத் தூத்துக்குடியில் ஓர் ஆங்கிலக் கல்வி நிலையம் நிறுவினர். இன்றுவரை அப்பள்ளி திறம்பெற நடைபெறுகிறது. ஆங்கிலத்தைத் தமிழ் மக்கள் சரிவரக் கற்று 'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்பதே நம் ஐயரவர்களின் விருப்பம்.

இவ்வாருகப் பல வழிகளிலும் உயர்வும் புகழும் வாழ்ந்த ஐயரவர்களின் இல்லறவாழ்வினை

இனி ஆராய்தல் வேண்டும். தம் இருபத்தொன்பதாம் ஆண்டில் வாழ்க்கைத் துணைவியைத் தெரிந்துகொண்டார். நாஞ்சில் நாடாகிய நாகர் கோவிலென்னும் நகரில் சார்லஸ்மால்ட் என்ற ஆங்கிலப் பாதிரியார் ஒருவர் சமயப்பணி ஆற்றி வந்தார், அவரது குமாரி எலிசா என்னும் நங்கையை நம் ஐயரவர்கள் மனைவியாக ஏற்றார். நற்குலத்தில் பிறந்து, அறிவிற் சிறந்து விளங்கிய அவ்வம்மையார் ஐயரவர்களை நன்குணர்ந்து அவரைக் கண்ணிமைகள் மணியைக் காப்பது போல் காத்து வந்தார். உடலிரண்டும் உயிர் ஒன்றுமாக அவ்விருவர் வாழ்வு நிகழ்ந்தது. அம்மையாரும் தமிழ் மொழிப்பற்றுக் கொண்டவர். நம்நாட்டுக் கிராம மக்கள் தமிழ் மொழியைப் பேசும் முறையிலேயே அம்மையார் பேசத் தெரிந்தவர். ஆகவே மனைவியார் உதவி கொண்டு எளியமுறையில் பேசுகின்ற பேச்சுத்தமிழ் கற்றார். கணவன் மனைவியிடம் கற்றுக்கொள்ள வேண்டிய அளவுக்குத் தமிழ் நடை அவ்வம்மையாரிடம் படிந்திருந்தது. ஆங்கிலேயர் பெண்களை நடத்துகின்ற அன்பான வழிகளை நற்கிறித்தவக் குடும்பங்களில் பலர் பின்பற்றி வாழ்கின்றனர்.

கால்டுவெல் ஐயரவர்கட்கு இரண்டு பெண் மக்களும், ஓர் ஆண் மகனும் பிறந்தனர். மகன்

ஆடிங்கிதன் (**Addington**) என்பார், மருத்துவக் கலை கற்று ஆஸ்திரேலியாவுக்கு அலுவலில் சென்றார். மூத்தமகள், வியத்தர் (**Wyatt**) என்னும் அன்பரை மணந்து தமிழ்நாட்டிலேயே திருச்சிப் பகுதியில் தொண்டாற்றினர். இளைய மகளோ, மணமான சில்லாண்டுகட்குள்ளாகவே இறைவனடி சேர்ந்தார். இம்மரணம் கால்டுவெல் ஐயரவர்களைப் பெரிதும் கலக்கமுறச் செய்தது. எனினும் மூத்தமகள் அன்பினால் தேற்றப்பட்டார். 'கடந்த ஞானியும் கடப்பரோ மக்கள்மேல் காதல்' என்னும் முதுமொழி பொய்யாகாதன்றோ? பின்னர் மருமகன் வியத்தருடன் தமிழ் நாட்டுத் தொண்டினைப்பற்றி அடிக்கடி கலந்து முடிவு செய்வார். மருமகனும் மாமனாரின் உள்ளப்பண்பை உணர்ந்து, மனமுவந்து பல வழிகளிலும் தம்மாலான உதவிகளனைத்தும் செய்தே வந்தார்.

இறுதிக் காலம்:

ஐம்பத்து மூன்றாண்டு அருந்தொண்டிலேயே வாழ் நாளைக் கழித்து, முதுமையடைந்த ஐயரவர்கள் வேலையில் விடைபெற்று, தம் இறுதி நாட்களைக் கழிக்கக் கொடைக்கானல் சென்றார். ஆங்குச் சென்றதும் கோயிலில்லாக் குறைகண்டு அத்தள்ளாத வயதிலும் கொடைக்கானலில் ஒரு

கோயில் கட்டினர். மருமகன் வியத்தர் அக்கோயிற் பணியில் பெரிதும் பங்கு கொண்டார். ஐயரவர்களின் உடல் வலிமை கொஞ்சங்கொஞ்சமாகக் குறைந்து வந்தது. மனைவியாரான எலிசா அம்மையார் உடனிருந்து பணிகள் பல புரிந்து பாதுகாத்து வந்தார். என்ருலும் ஐயரவர்கள் நோயுற்ருர். ஏழு நாட்கள் வரை படுக்கையிலிருந்தார். அவ்வமயம் ஆஸ்திரேலியாவிலிருந்து தந்தையைக் காணத் தனயன் வந்திருந்தார். தந்தையின் நோயறிந்து படுக்கையின் பக்கலிலே அமர்ந்து பக்குவ உதவிகள் பல செய்தார். எவர் என் செய்தாலும் இறைவன் சித்தம் தனியன்ருே? கடவுள் அழைக்கச் சித்தங் கொண்டார். 'அப்பனே அடியேன் நின் சரணடைந்தேன், அஞ்சலென்று அடைக்கலமருளே' என்ற மொழிகள் கூறித் தம் 76-ம் வயதில் 1891ல் இறைவன் புகலிடம் புகுந்தார். அவரது உடல் பேழையொன்றினுள் வைக்கப்பட்டு, கொடைக்கானலிலிருந்து இடையன்குடிக்குக் கொண்டுவரப்பட்டுத் திரளான மக்கள் கண்ணீர்விட்டுக் கதறியழ, சுற்றிலுமிருந்தவர்கள் துதிபாடி இறைவணக்கம் செலுத்த, அங்குள்ள ஆலயத்தே அடக்கம் செய்யப்பட்டது. மனையாளும், மகனும், திருச்சியிலிருந்து விரைந்து வந்த மகளும், மருமகனும் சுற்றியி

ருந்து, தந்தையாரின் பொன்னுடலைப் பூமிக்குள் இறக்கினர்.

நூல்களும், பண்பும்:

ஐயரவர்கள் தமிழ் நாட்டாருக்கு விட்டுப் போன நிதிக்குவியல்களான 'தென்னிந்திய மொழிகளின் ஒப்பிலக்கணம்,' 'திருநெல்வேலிச் சரிதம்,' 'தாமரைத் தடாகம்,' 'ஞானஸ்நானம்,' 'நற்கருணை' முதலியவை என்றென்றும் குன்றின் மேலிட்ட விளக்கென விளங்கி நிற்கும். ஆங்கில நாட்டிற் பிறந்து, தமிழ் நாட்டில் வாழ்ந்து, ஏசு பெருமான் நல்வழியை மக்களுக்குக் காட்டித் தமிழ்மொழியின் தொன்மையும் உயர்வுங் கண்டு அதனை உலகினருக்குக் காட்டிச் சென்ற டாக்டர், அத்தியட்சகுரு, கால்டுவெல் ஐயரவர்களை என்றென்றும் மறக்க வியலுமோ? குளிர்மிகுந்த நாட்டிற்பிறந்து, ஆயுளெல்லாம் வெப்பத்தால் மேனி வாட்டமுற்றும் கருமமேகண்ணான அவர் அனைத்தையும் பொறுத்தார். எடுத்த கருமத்தை எத்தகைய இன்னல்வந்துற்றிடினும் இனிதே முடித்துத் தீர்த்தார். ஆறடி உயரமும் அழகிய தோற்றமுமுடையவர். இடைவிடாது இறைவனை நினைந்துகிடந்தார். எளிய வாழ்வினை மேற்கொண்ட ஐயரவர்கள் காலமெல்லாம் நாட்டின் ஒரு மூலையில் சின்னஞ்சிறு கிராமத்தில் வசித்து

வந்தார். ஏழைகளின் துயரங் கண்டு, அவருக்காகத் தம்மாலான உதவிகள் செய்து வறுமை போக்கினார். கல்விக்காகப் பெரிதும் பாடுபட்டுத் தமிழ்நாட்டு மக்களைத் தட்டி எழுப்பி, விழிக்கச்செய்தார். சென்னைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா ஒன்றில் பேசும்போது தமிழ்மொழிக்குத் தொண்டு செய்யவேண்டிய கடமையை இளைஞருக்கு எடுத்துக்காட்டி வற்புறுத்திப் பேசினார். தமிழ்மொழியும் தானும் உடலும் உயிருமாக வாழ்ந்தவர். இவ்வுலக வாழ்வினின்று விடை பெற்ற பின்பும் தன்னுடல், தான் தொண்டாற்றிய இடையன்குடியிலேயே அடக்கம் செய்யப்பட வேண்டுமென்ற தன்விருப்பத்தைத் தெரிவித்திருந்தார். இதினின்றும் இடையன்குடியையே தன் தாயகமாகக் கொண்ட ஐயரவர்களின் பரந்த நோக்குப் புலப்படுகிறது. பூமியிலே பொருள் ஒன்றும் சேர்த்துவைக்காத அவர்க்குப் புகழ் உலகில் பெரும் நிதிக்குவியல் சேர்ந்தது. "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்பது நம் ஐயரவர்கள்பால் உண்மையாயிற்று. தமிழ்நாடு உள்ளளவும் அவர் செய்த நன்றியை மறக்கவியலாது. அவர் உயர்த்திய தமிழ் ஓங்குவதாக!

சோழவந்தானூர்



அரசஞ் சண்முகனார்.

தோற்றுவாய்:

"கல்தோன்றி மண்தோன்ருக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்தகுடி" என்ற சொற்களுக்கிலக்காய், வாழ்ந்த வீரர்கள் பிறந்தது பாண்டி நாடு. மூவளங்கள் மலிந்து செறிந்ததும், நாவளம் உயர்ந்த நல்லோர் பலரை ஈன்றது மிந்நாடு. தமிழ் பிறந்ததும், வளர்ந்ததுமிந்நாடு. தமிழ்ச் சங்கங்கள்தழைத்த திந்நாடு. சங்கப்புலவர் காலத்திலிருந்து இன்றுவரை கணக்கற்ற புலவர் களைக் கண்டுள்ளதிந்நாடு. இன்றைக்கு இருக்கின்ற நிலைமையில் பார்த்தால் பழைய பாண்டி நாட்டின் பரப்பு இன்றுள்ள மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களின் பரப்பு முழுவதாகும். இவையே முன்னர் பாண்டியநாடெனவிளங்கியது. கடைச் சங்கம் வாழ்ந்த இடம் இம்மதுரையென்பர். இன்று தமிழ்ச்சங்கம் ஒன்றிருந்து, தமிழ்ப் பணியாற்றி வருவது மதுரையேயாகும். பாண்டிய நாட்டின் தலைநகராய் விளங்கியதும், பல மன்னர்கள் புகழோங்க அரசு செலுத்தியதும் இம்மதுரையேயாகும். இம்மதுரையம்பதிக்கு அண்மையில், பதின்மூன்றுகல் தொலைவிற்கு வடமேற்கில் சோழவந்தான் என்னும் சிற்றூர் ஒன்று உண்டு. இவ்வூர் சனக நாராயணபுரம்

என முன்னர் வழங்கப்பெற்று வந்தது. சோழ மன்னனெருவன் ஒருகால் ஈண்டுவந்து இவ்வூரின் வளப்பங்கண்டு உவந்தான் என்ற காரணத்தால், இவ்வூர் சோழனுவந்தான் என்ற பெயராகிப், பின்னர் நாளடைவில் சோழவந்தான் என்ருயிற்று எனச்சொல்வர். இவ்வூர்ப் பெரியார் பலர், சோழவந்தான் என்ற பெயருக்கு சோழன் ஒருகால் இங்கு வந்தான் ஆதலின் சோழவந்தான் என்ற பெயர் வழங்குகிறது எனவும் சொல்வர்.

இவ்வூர், வைகை ஆற்றின் கரை மீது அமைந்துள்ளது. ஊரைச் சுற்றிலும் நெல் வயல்களும், தென்னே, வாழை, கரும்பு, பலா, கமுகு போன்ற பயன்தருமரங்களும் செறிந்துள்ளன. கற்புச் செல்வியாம் கண்ணகி தன் கணவனே யிழந்தபின் இவ்வூரின் வழியே சென்றதாக ஆராய்ச்சிக்குறிப்பொன்று அறிவிக்கின்றது. இத்தகைய வளஞ்செறிந்த ஊரிலே இற்றைக்கு ஏறக்குறைய எண்பது ஆண்டுகட்கு முன்னர் புலவர் அரசஞ்சண்முகனர் என ஒருவர் பிறந்து அரிய பல தமிழ் நூல்களே ஆக்கியுள்ளார். ஆதலின் அவரது வாழ்வை மாணவரும் மற்ருேரும் அறிதல் நலந்தரும்.

பிறப்பும் வளர்ப்பும்:

ஏறக்குறைய மூந்நூறு ஆண்டுகட்கு முன்னர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த

சைவவேளாளர் குடும்பங்கள் மூன்று சோழவந் தானுக்கு வந்தன. அக்குடும்பங்கள் இன்றுவரை இவ்வூரிலே நிலைத்துப் பெருகியுள்ளன. இம் மூக் குடும்பங்களில் மூத்தவரான செண்பகம் பிள்ளை யென்பார்பெயர்கொண்டு, இக்குடும்பங்கள் செண்பகம் பிள்ளை மரபினர் என அழைக்கப் படுகின்றன. இச்செண்பகம் பிள்ளை மரபிலே ராமுபிள்ளை என்னும் அறிஞர் ஒருவர் பத்தொன் பதாம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் வாழ்ந்து வந்தார். அவரது மகன் அரசப்பப்பிள்ளை என் பாரே நம்புலவரின் தந்தையாராவார். அதே குலத்தில் வீரபத்திர பிள்ளை என்னும் தமிழறிஞர் ஒருவர் பனையூரில் வாழ்ந்தார். இவர் கல்வி, கேள்விகளிலும், இறை வணக்கம் செய்வதிலும் இணையற்றவர். சைவ சமயத்தைப் பரப்புவான் வேண்டி, பற்றறத் துறந்த துறவிகளை ஆதரித்து கிராமங்களிலே சைவ மடங்களையும் தமிழையும் வளர்க்கும் தொண்டினைச் செய்து வந்துள்ளார்.

இவர் தம் மகள் பார்வதியம்மையார், தந்தை யார் போலவே நற்குண நற்செய்கைகளிற் சிறந்த வர். அவ்வம்மையாரை அரசப்பப்பிள்ளையவர்கள் தம் வாழ்க்கைத் துணைவியாய் ஏற்றார். இருவரும் 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும், பயனும் அது' என்ற வள்ளுவப்பெருந்

தகையின் வாக்குக்கிணங்க வாழ்வு நடத்தினர். அவ்வாழ்வின் பயனுய் அவதரித்தவரே நம் அரசன் சண்முகனுர் என்னும் தமிழ்ப்புலவர். 1868-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ம் நாளில் நம் புலவர் பெருமான் பிறந்தார்.

பிற்காலத்தே பெரும் புலவராக விளங்கப் போகும் அவரது முகத்தோற்றம் பிறவியிலேயே தெள்ளிதின் விளங்கிற்று. மூத்த மகன் என்றபடியால் முறைப்படி வளர்க்கவேண்டிய அளவுக்கு மிஞ்சியே சீராட்டிப் பாராட்டி வளர்த்தனர். அரசப்பப் பிள்ளைக்குப் பொருட்செல்வம் மிகுதியாக இருந்தமையால் குழந்தை சண்முகம் செல்வச் செருக்குடனே வளர்க்கப்பட்டார். சிறு வயதில் சண்முகனுர்செய்த குறும்புகள்மிகஅதிகம். 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்னும் முதுமொழிக் கிணங்க ஐந்தாம் பருவத்தே கல்வி கற்பிக்க முற்பட்டனர் பெற்ருேர். தகுந்தவோர் ஆசிரியர் தேடினர். கல்மண்டபம் என்றழைக்கப்படும் பிள்ளையார் கோயில் ஒன்று சோழவந்தானில் உண்டு. அந்நாளிலிருந்து இன்றுவரை அக்கோயிலில் தொடக்கப்பள்ளி ஒன்று நடைபெறுகிறது. அப்பள்ளியின் அன்றைய நாள் ஆசிரியர் அழகர்சாமி தேசிகர் என்பார். அவரிடம் நம் சண்முகனுர் முதல் எழுத்துக்களைக்

கற்றுக்கொள்ள சேர்ப்பிக்கப்பட்டார். உயிர் எழுத்துக்களான 'அ' முதல் 'ஔ' முடிய கற்றுக் கொடுத்து, அதன் பின் மெய் எழுத்துக்கள் கற்பித்துப் பின்னர் உயிர்மெய் முதலிய எழுத்துக் களும் சிறுசிறுசொற்கள், சொற்ருெடர்கள் ஆகியவைகளும் கற்பித்தலே தமிழ்நாட்டில் தொன்று தொட்டு வந்த வழக்கம். இம்முறையே தமிழ் ஆசிரியர்கள் சிறந்ததெனக் கையாண்டனர். எனவே, சண்முகனுர் முதல் எழுத்துக்களை முறையே இங்குக் கற்ருர். சில மாதங்கள் இப்பள்ளியில் இருந்த பின், படிக்க எழுதப் பழகுமுன்னரே பள்ளியைவிட்டு விலகினுர். தந்தையார் அரசப்பப் பிள்ளையோ செல்வமிகுதியைக் கண்ணுற்றும், ஆண்குழந்தையாகத் தம் குலவழியை விளக்கவந்த குழந்தையெனக் கருதியும், கல்வி கற்காவிடினும் பரவாயில்லை, எனச் சும்மா விட்டு விட்டார். துள்ளித்திரிகின்ற பருவம்; துடுக்கு கட்கு அளவு இல்லை. ஆங்காங்கு தண்டனைகளும் இடையிடையே உண்டு. இவ்வாருக ஐந்தாண்டு முதல் பன்னிரண்டாம் ஆண்டு முடிய அப் பள்ளிப்பருவம் பாழாயிற்று. பொருட் செல்வம் மிகுந்திருந்த காரணத்தால் கல்விப்பொருள்மீது பெற்ருேர்க்குக் கவனம் செல்லாது போயிற்று.

"கிண்ணிமடமும் பள்ளிப்படிப்பும்"

சோழவந்தானூரில் இரண்டு கிண்ணி மடங்கள் இருக்கின்றன. இவற்றில் ஒன்று ஊரின் நடுவே சிறந்ததோரிடத்தில் அமைந்துள்ளது. மற்ருென்று ஊருக்கு வடக்கே ஒருகல் தொலேவுக்குள் உள்ளது. ஊரின் நடுவிலுள்ள மடம் செண்பகம் பிள்ளே மரபினர்க்குச் சொந்தமானது. தமிழ் நாட்டில் பண்டைய மடங்கள் பல. தக்க அறிஞர்களேத் தம்மிடத்தேகொண்டு தமிழுக்கும் சைவத்திற்கும் ஒருங்கே தொண்டு புரிந்து வந்துள்ளன. இக்கிண்ணி மடம் தக்கதோர் தமிழறிஞரின்றித் தவித்த நிலேகண்டார் அரசப்பப் பிள்ளே. ஆதலின் தம் மாமனுர் வீரபத்திர பிள்ளேயவர்கள் ஊரிலே அவரது ஆதரவுடன் வாழ்ந்து வந்த செந்தமிழ்ச் சீலராம் சிவப்பிரகாச சுவாமிகளேக் கண்டு மாமனுரின் மனச்சம்மதம் பெற்றுத் தம்மூர் கிண்ணிமடத்திற்கழைத்துவந்தார். சிவப்பிரகாச சுவாமிகள் இலக்கிய இலக்கண, சோதிட நூல்களே ஆராய்ந்தறிந்த தலேசிறந்த அறிஞர். பொறிவாயில் ஐந்துவித்து, புலன்களே ஒரு முகப் படுத்தி இறைவன்பால் செலுத்துகின்ற சிவனடியார். ஆதலின் கிண்ணிமடம் கல்வி, கேள்விகளில் சிறப்புற்று விளங்கியது. நாடோறும் கணக்கற்ற தமிழ்ப் புலவர் ஈண்டு வந்து போயினர். இத்

தகைய குணசீலர், சண்முகனாரைக் கவனிக்க லானார். தம்மை அன்புடன் அழைத்து வந்து மடந் தழைக்கவேண்டிய வகையிலெல்லாம் தம்மை ஊக்குவித்த அறச்செயலாளர் அரசப்பப் பிள்ளையின் அருங்குமரன் கல்வியின்றி அலை கின்ற நிலையறிந்தார்; உள்ளத்தே கவலையுற்றார். அரசப்பப் பிள்ளையை ஆங்கு வரச்செய்து கல்விப்பொருளை மகனுக்குத் தக்க பருவத்தே கொடுக்காத குறை சொல்லிக் கடிந்தார்.

தந்தையாரும் பிழையுணர்ந்து அன்றைக்கே தம் மைந்தன் சண்முகனைச் சிவப்பிரகாசரிடம் சேர்ப்பித்தார். ஆசிரியருக்கும் மாணவருக்கும் தொடர்பு வலுத்தது. சண்முகனாருக்கு முறை யாகக் கல்வியைப் பயிற்றுவித்தார் சுவாமிகள். ஆசிரியரின் அடிச்சுவடு பின்பற்றி அவரது ஆணைகளைத் தலைமேற்கொண்டு தமிழின் சுவை யறிந்தார் சண்முகனார். குருகுலத்தின் கல்வி முறையைப் பின்பற்றி ஈண்டு கல்வியளிக்கப் பட்டது. ஊசி காந்தத்தினைக் கண்டணுகுதல் போல உறவு நீடித்தது. தோண்டத் தோண்ட ஊற்றினின்று ஊறுகின்ற நீர் தெளிவடைதல் போல், நூல்களின் நுட்பங்களெல்லாம் அறிய அறிய சண்முகனார் உள்ளம் தெளிந்தது. இரண் டாண்டுகட்கு மேலாகவே இலக்கிய, இலக்கண,

சோதிட நூல்களைச் சிவப்பிரகாசரிடம் செவ்வனே கற்றுச் சிறப்படைந்தார். ஆண்டு பதினைந்துக்குள்ளாகவே சண்முகனர் புலவர் எனப் புகழ் எய்திப் பலராலும் பாராட்டப்பெற்றார். கற்பவை கசடறக் கற்றார் புலவர் சண்முகனர். ஆண்டு பதினறு அடையுமுன்னே 'உயிரும் உடம்புமாம் முப்பது முதலே' என நன்னூலார் சொல்லுகின்ற அகரமுதல் ஔகாரம் முடிய உள்ள 12 எழுத்துக்கள், ககரமுதல் னகரம் முடியவுள்ள 18 எழுத்துக்கள், ஆக மொத்தம் 30 எழுத்துக்களையும் முதலெழுத்தாகக் கொண்ட கொச்சகப் பாக்களைப் பாடினர். அதைத் தம் ஆசிரியரிடம் காட்டினர். கண்ட கணக்காயர் உளமகிழ்ந்து வாழ்த்தினர். புலவர் சண்முகனர் அவ்வளவு சிறுவயதில் கவிகள் இயற்றிய திறம் வியந்தார். எனவே இயற்கையிலே கவிஞன் எனக்கண்டார். மென்மேலும் கற்பிக்கவேண்டிய நூல்களையெல்லாம் கற்பித்து கலையில் வல்லுநராகத் திகழச் செய்தார். ஆசிரியர் கொடுக்கின்ற இலக்கண, இலக்கிய அறிவெல்லாம் பெற்றுக்கொள்ளும் ஆற்றல் நிரம்பியவரான படியால் அக்காலையில் தமக்குக் கற்பித்தவையெல்லாம் கருத்துடனே பெற்று ஐயம் திரிபு அறவே நீங்கப்பெற்றார் புலவர் சண்முகனர். இவ்வாறு பதினறும் ஆண்டிலே புலமைத் தன்மையில் வளர்ந்துவரும் நாளில் தன்னைப் பெற்

றெடுத்த தந்தையார் அரசப்பப்பிள்ளை இவ்வுலக வாழ்வினின்றும் விடைபெற்ருர். தந்தையாரின் பிரிவு தனயனைக் கலங்கச்செய்தது. மூத்த மகனுன காரணத்தால், குடும்பத்தின் முழுப் பொறுப்பும் புலவர் சண்முகனுரின் தலைமேற் சார்ந்தது. குடும்பப் பொறுப்பை ஏற்ருர். எனினும் அதில் சிறிதும் பழக்கமில்லாக் காரணத்தாலும், உள்ளம் எந்நேரமும் கல்வியாராய்ச்சியிலேயே உறைந்து கிடந்தமையாலும் பொருட்செல்வம் வளர்வதற்குப் பதிலாக சிதைவுற்று வந்தது. அதையும் கவனித்தாரில்லை நம் சண்முகனுர். கருமமே கண்ணுன புலவருக்கு மொழிவளர்ச்சி ஒன்று தவிர பிற ஒன்றும் பெரிதாகத் தோன்றவில்லை.

"தமிழுக்கும் அமுதென்று பேர்—அந்தத்
தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்குநேர்"

எனப் பாரதிதாசன் பாடியுள்ள சொற்களுக்கு இலக்காகத் தமிழை உயிரெனக் கருதினுர். புலவர் சண்முகனுர் இந்நிலையிலே வாழ்வு நடத்திவரும் போது வயது 18 ஆகப் பெற்ருர். கி. பி. 1886-ல் 'மாலைமாற்று மாலை' என்றவொரு நூலை எழுதி அதைத் தம் ஆசிரியர் சிவப்பிரகாசரிடம் காட்டினுர். அந்நூலில் எழுதிய இரண்டாம் காப்புச் செய்யுளில் 'வேறலம்' என எழுதியிருந்ததை

அடிகள் கண் ணுற்று அச்சொல்லுக்குப்பொருள் கூறுமாறு தம்மாணவரான புலவரிடம் கேட்டார். உடனே புலவர்பெருமான், 'யாம் நின்னடிமையே யன்றி வேறு அல்லேம்' என விடை பகர்ந்து, குற்றியலுகரச்சொல்லுக்கு முன்னர் உயிரெழுத்து வருங்கால் புணருகின்ற முறையையும் காட்டி விளக்கம் கூறினர். அகமகிழ்ந்தார் சிவப்பிரகாசர். கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ? சொல்லெல் லாம் அரசஞ்சண்முகனர் தம் சொல்லாமோ? எனக்கூறி 'அப்பா சண்முகம் ஆகும் பெரும் பொருள் ஆகியது' என வாழ்த்தி அனுப்பினர்.

"தரித்திரம் தரித்திரோமென்னும், இத் தாரணி சிரித்திடச் செல்வமே செல்வோம் என் னும்" என்று ஒரு கவியில்எழுதுகின்ருர் அறிஞர் வேதநாயகம் பிள்ளையவர்கள். அம்மொழிகட் கிலக்காகப் புலவர் சண்முகனர் குடும்பத்தில்செல் வம் சிறிதுசிறிதாகச் சிதறியோடிக் கொண்டிருந் ததைச் சிறிதும் கவனித்தாரில்லை. கேடில் விழுச் செல்வம் கல்வி யெனக் கொண்டவரன்றே! தமி ழன்னைக்குத் தம்மாலான தொண்டாற்றுதலே தக்க வாழ்வு எனத்தம்மைத் தேற்றிக்கொண்டார். எந்த நேரமும் ஆழ்ந்த சிந்தனையும் தொல்காப்பி யம், அகநானூறு, புறநானூறு போன்ற சங்க

நூல்கள், ஐம்பெருங்காப்பியம், பதினெண்கீழ்க் கணக்கு இவைகளின் ஆராய்ச்சியும் வாழ்வின் இலக்காகக்கொண்டார். தமிழ் இலக்கிய இலக் கணங்கள் பெருங்கடல்கள்; அவற்றின் ஆழங் காணப் புகுவார், ஆழ்ந்து சென்று கொண்டே யிருக்கலாம். மூழ்க மூழ்க இன்பந்துய்க்க இய லுமேயன்றி ஆழங்காண வியலாது. ஆனால் ஆழம் காணுவோர் திறனுக்குத் தக்கதாக அதிக மாகும். எனவே, நம்புலவர் சண்முகனாரும் அதிக ஆழத்தில் மூழ்கி இன்பங்கண்டு கொண்டே யிருந்தார்.

தமிழாசிரியப்பணி:

1890-ம் ஆண்டிலே தம் இருபத்திரண்டாம் வயதில் மதுரைச் சேதுபதி உயர்நிலைப்பள் ளிக்கு ஒருதமிழாசிரியர் வேண்டியிருந்தது. புலவர் சண்முகனாரின் புகழ் கேட்டு அவரை அழைத்து வேலையில் அமர்த்தினர். ஓரிருவருக் குத் தமிழ் கற்பித்தலைக் காட்டிலும் பள்ளியிலே பலருக்கும் தமிழ்ச்சுவையை ஊட்டி மகிழ்விக்கலா மென்னும் உவகைகொண்டு, இத்தகைய தொண்டே தமிழன்னை தனக்கீந்தது என எண்ணி, ஏற்கனவே பக்குவ நிலையில் நின்ற புலவர் சண்முகனார் பள்ளியின் அலுவலைப் பரி

வுடன் எற்ருர். தமிழன்னேக்குத் தொண்டு செய்யத் தக்கதோர் வாய்ப்புகிடைத்த பெருமகிழ்வால் ஊக்கமிகுந்து மாணவர்கட்கு உழைத்தார். பச்சைமரத்தில் பாய்ந்து செல்லும் ஆணிபோல மாணவருள்ளத்தில் தமிழ்மொழி வேரூன்றியது. ஒரே பாட்டுக்கு வெவ்வேறு வழிகளில் இரண்டு மூன்று விதமாகப் பொருள் சொல்வார். பாடம் நடத்திக்கொண்டிருக்குங்கால் ஆழ்ந்த சிந்தனையால் தம்மையே மறந்து கண்களை மூடிச் செயலற்ற நிலையில் இருப்பார். மாணவர்கள் முதன் முதலில் இந்நிலையறியாது, தூங்குகின்ருர் என நினைத்து, 'தமிழ் ஐயா! எழுந்திருங்கள்' எனத் தட்டி எழுப்புவராம். கண்களை விழித்தவுடன் தாம் நடத்திக்கொண்டிருக்குப்பாட்டுக்கு கண்களை மூடுமுன்னர் சொன்ன பொருள் விடுத்து முரண்பட்ட வேருெரு பொருள் கொடுப்பராம். ஆசிரியரின் ஆழ்ந்த மன நிலையறிந்து மாணவர் தம் அறியாதசெயலுக்கு வருந்தி அன்புகொண்டு மன்னிக்கவேண்டுவர். அக்காலையில் புலவர் சண்முகனர் மாணவர்க்கும் ஆசிரியருக்கும், மக்களுக்கும் தந்தைக்குமுள்ள தொடர்பு உண்டு. ஆதலின் மன்னிப்பு என்ற சொல்லுக்கிடமேயில்லையெனச் சொல்லி மாணவரை மகிழ்விப்பார். என்னே இவ்வாசிரியரது மாண்பு! இவரிடம்

கல்வி கற்றோர் சோழவந்தான் வட்டாரத்தில் இன்றைக்கும் தமிழில் சிறந்தோராய்விளங்குகின்றனர். அவருள் சிலர் கவி எழுதும் ஆற்றலும் பெற்றுள்ளார். இவ்வாறாகப் பன்னிரண்டு ஆண்டுகள் பள்ளியிலே தொண்டாற்றினர் நம் புலவர் சண்முகனர். இக்காலையில்தான் புலவர் சண்முகனரின் நூல்களில்பெரும்பாலன மிளிர்ந்தன. இலக்கணஞ் சொல்வதிலே ஈடுஇணை சொல்ல இயலாப் புலவராக அன்றையநாளில் திகழ்ந்தார். குடும்பக்கவலை சிறிதுமின்றித் தமிழாராய்ச்சியிலேயே பொழுதெல்லாம்போக்கிவந்தாராதலால், தமிழ் நூல்களைத்தாமே எழுதி வெளியிட வாய்ப்புகிட்டியது. மதுரையிலும், மற்றும் பலவிடங்களிலும் தமிழ்ச்சொற்பொழிவுகள் நிகழ்த்தித் தொல்காப்பியம் போன்ற பெருநூற்களுக்குத் தம் புதிய கருத்துக்களைப் புலவரிடைப் புகுத்திவந்தார். உண்மையான பொருளிருக்கப் பல ஆசிரியர்கள் திறமைக்குத் தக்கவாறு வேறு பொருள் திணித்துச் செய்திருந்த உரைகளைக் கண்டித்தார். அவைகளெல்லாம் எவ்வாறு பொருத்தமில்லையென எடுத்துக் காட்டினர்.

இடையில் நோய்:

சேதுபதிக் கலாசாலையில் வேலை பார்த்துக் கொண்டிருக்குங்கால், வயிற்றினுள்ளே நாபிக்கு

அடியில் ஒரு கட்டி புறப்பட்டு மல மூத்திரங் கழிக்கவும் இயலாதவராய் வருந்தினர். பல நாட்டு மருத்துவர்கள் மருந்து கொடுத்தும் தீர்க்கமுடிய வில்லை. தாங்கொணுத வேதனையால் தவித்தார். வேறு ஊர் சென்றேனும் விரைவில் பிணி நீங்கப் பெற விரும்பினர். உத்தமரும் வறியார்க்கொன் றீவதே யீகையென வாழ்வில் கொண்டவருமான பாலவநத்தம் மன்னர் பாண்டித்துரைத் தேவர வர்களிடம் இதனைப் பகர்ந்தார். அப்பெருந்தகை யார் ஓராண்டு முழுவதும் வைத்தியம் பார்க்க வென ஒய்வு கொடுத்து, அவ்வோய்வுக் காலத்தி லும் புலவர் சண்முகனர் பெற்றுவந்த ஊதியத் தையும் கொடுக்குமாறு ஆணையிட்டு ஆதரித்தார். இக்காலையில் ஓரிரண்டு நாட்களுக்கு ஊதியத் துடன் ஒய்வுகிட்டப்படும்பாடுகொஞ்சமல்ல. அந் நாளில் பேரரசர் வழியில்வந்த பெருந்தகையோன் தமிழ்மொழியின் உயர்வறிந்து அதனை உண்டாக் கும் புலவருக்கு ஓராண்டுச் சம்பளத்தை ஒரு வேலை செய்யாமலும், நோய்க் காலத்தே பெற உதவியுள்ளார் என அறியும்போது தமிழ் வளர்ந்த விதம் தெரிகிறது. அன்றியும் நோய் தீர்க்க மருந்துக்கென மன்னர் நூறு வெண் பொற்காசுகள் கொடுத்தார்.

புதுக்கோட்டைக்குப் பக்கத்தில் ஆலங்குடி என ஓர் ஊர். ஆங்குக் கைதேர்ந்த மருத்துவர் வேணுகோபால் நாயுடு அவர்கள். அவர்களிடம் சென்றார். சில நாட்கள்வரை சிகிச்சை செய்தார். நோயின் தன்மையை அறிந்தார். தம்மாலாற்ற வியலாதெனக்கண்ட அவர், தஞ்சையிலே உள்ள தலைமை மருத்துவர் H. M. ஹக்கீம் l. m. s. அவர்கள் பால் அனுப்பிவைத்தார். அவ்வாறு அனுப்பும் போது வேணுகோபால் நாயுடு அவர்களும் புலவர் பெருமானுக்குத் தாமே ஐம்பது ரூபாய் அன்புடன் அளித்தார் என அறிய, புலவர்களை அனைவரும் ஆதரித்த, தமிழ்ப்பண்பு விளங்கு கிறது. தஞ்சையில் அவ்வைத்தியத் தலைவர், இரணசிகிச்சை செய்து புலவர் நோயைப்போக்கி ஆதரித்தார். இவ்வரலாற்றைப் புவவர் சண்முக னாரே தங் கைப்பட எழுதி 'காலத்தினாற் செய்த நன்றிசிறிதெனினும் ஞாலத்தின் மாணப்பெரிது' என்ற குறளையும் காட்டுகிறார். தஞ்சையிலே நோய் நீங்கப்பெற்ற புலவர், வைத்தியத் தலைவரைப் புகழுமிடத்து "இப்போதுள்ள உடலைத் தந்த தந்தையும் தாயுமானார்" என எழுதித் தொல் காப்பியப்பாயிர விருத்தியை எழுதுங்கால், அவ் வைத்தியத் தலைவரின் நினைவுச் சின்னமாக அச்சிடுவித்ததாகவும் எழுதுகின்றார்.

மதுரைத் தமிழ்ச்சங்கப் பணி:

1901-ம் ஆண்டிலே சென்னை மாநில அரசியல் மாநாடு மதுரையில் கூடியது. அவ்வமயம் குறுநில மன்னராக வாழ்ந்த பாலவநத்தம் பாண்டித்துரைத் தேவரவர்கள் அம்மாநாட்டில் வரவேற்புக் கழகத் தலைவராயிருந்தார். அவர் வரவேற்புரையாகப் பேருரை ஒன்று நிகழ்த்த வேண்டியிருந்தது. தமக்கேற்பட்ட ஒரு சிறு ஐயப்பாட்டைத் தீர்த்துக்கொள்ள திருக்குறள், கம்பராமாயணம் ஆகிய நூல்களில் ஒரு சில வரிகளைப் பார்க்க வேண்டியிருந்தது. அந்நூல்கள் வாங்கிவருமாறு தமக்கறிமுகமான பல நண்பர்களிடம் ஆளனுப்பினர். இவ்விரு நூல்களும் மதுரையில் எவரிடமும் கிடைக்கவில்லை. உள்ளத்தில் வியப்பும், உணர்வில் வருத்தமும் கொண்டார். பாண்டிய மன்னர்கள் பேரரசு செலுத்தித் தமிழ் வளர்த்த மதுரையிலே, வள்ளுவன்வாழ்ந்துகுறள்கொடுத்தமதுரையிலே, தமிழ்மொழிக்குத் தலையாய திருக்குறளே இல்லாது போயிற்றேயெனத் திடுக்கிட்டார். நினைந்து, நினைந்து வருந்தினர். அக்குறை போக்கும் வழியை உடனே வகுத்தார். மதுரையிலே ஒரு தமிழ்ச்சங்கம் நிறுவி, தமிழ் தழைக்கத் தம்மாலானதைச் செய்ய முடிவு செய்தார். பலர்க்கும்

திருமுகம் விடுத்தார். இச்செய்தியறிந்த அனைவருள்ளமும் களிப்பால் பொங்கியது. தம் உறவினரான இராமநாதபுரம் அரசர்க்கும் அவ் விருப்பத்தைத் தெரிவிக்க அதுகண்டு அவர் மனமுவந்தார். வேண்டிய ஒத்துழைப்புத் தருவ தாக உறுதி கொடுத்தார். எனவே, 1901-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14-ம் நாள், டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், பரிதிமாற்கலைஞன், (வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியார்),மறைமலை யடிகள் (சாமி வேதாசலம்), சேது அரண் மனைப் பெரும்புலவர் இரா. இராகவையங்கார், கோம்பைச் சித்திரகவி வித்துவான். க. திருமலை சக்கையா, சோழவந்தானூர்ப் புலவர் சண்முக னூர், திருமயிலைப் புலவர் சண்முகம்பிள்ளை ஆகிய இன்னோரன்ன தமிழ்ப் புலவர்களை யொருங்குதிரட்டிப் பல தமிழ்ச்சொற்பொழிவுகள் நிகழ்த்தச் செய்து அன்றே தமிழ்ச்சங்கம் நிறு வினார். அன்றைய நாளில் புலவர் சண்முகனார் ஆற்றிய பகுத்தறிவோடு கூடிய சொற்பொழிவு பாண்டித்துரைத் தேவரவர்களின் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்ததோடன்றி, அவர்மீது அள வற்ற பற்று உண்டாகுமாறும் செய்தது. அது வரையில் புலவர் சண்முகனாரின் புலமைத் திறன் அறியாத பல அறிஞர்கள் அன்றறிந்தனர். 'எப்

பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்பதற்கிலக்காக, உண்மைப் பொருள் கூறுகின்ற சண்முகனர் என அறிந்தனர்.

தமிழ்ச்சங்கத்தில் சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையொன்று தொடங்கப்பெற்றது. அக்கலா சாலைக்கு மானியம் ஒதுக்கப்பெற்று அதன் வரு வாயைக் கலாசாலையில் கல்வி கற்கவரும் மாணவர் கட்காகும்செலவுக்கென ஒழுங்கு செய்யப்பட்டது. இக்கலாசாலைக்குத் தலைமை ஆசிரியராகத் திருநாராயண ஐயங்கார் என்பார் நியமிக்கப்பட் டார். இக்கலாசாலைதவிர, பல தமிழ்நூற்கள் பதிப் பித்து வெளியிடுதல், ஆராய்ச்சித்துறையில் தமிழ் விளக்கம் காட்டித் தமிழ் வளர்த்தல், திங்களிதழ் நடத்துதல் போன்ற திருப்பணி கட்குத் தலைமையாகப் புலவர் இரா. இராகவையங் காரவர்கள் நியமனம்பெற்ருர். இவ்வாறு தொடங்கியஇப்பணிகள் இன்றுவரை மதுரையில் இனிதேநடைபெறுகின்றன.

தமிழ் அறிவு வளர்வதற்குப் பலர் தமிழ்ப் புலவர்களாக நாட்டில் திகழ்தல் இன்றியமையா தது. எனவே, தமிழ்ப்புலவர்களை உண்டாக்கும் நிறுவனம் ஒன்று அங்கே ஏற்படுத்தினர்.

6

அதுவே நாம் முன்னர்க் காட்டிய செந்தமிழ்க் கலாசாலை; அக்கலாசாலையில் பண்டித வகுப்பு ஒன்று வைத்து அத்தேர்வில் வெற்றிபெற்றவர் கட்குப் 'பண்டிதர்' பட்டம் வழங்குவதாக முடிவு செய்து அவ்வாறே நடைபெறுகிறது. பிரவேசம், பாலபண்டிதம், பண்டிதம் என மூன்று வகுப்புக் களாகப் பிரிக்கப்பட்டு பிரவேசம் ஓர் ஆண்டும், பாலபண்டிதம் ஈராண்டுகளும், பண்டிதம் ஈராண்டுகளும் ஆக ஐந்து ஆண்டுகள் மாண வருக்குத் தமிழ் கற்பிக்கப்படும். இங்குப் படிக்கும் மாணவர்க்கு உண்டியும், உறையுளும் இலவச மாகக் கொடுக்கப்படுகின்றன. இக்கல்லூரியில் ஓர் ஆசிரியர் வேலை காலியாயிற்று. அவ் வேலைக்குத் தகுதியுள்ள ஒருவரைச் சங்கப் பொறுப்பாளர் வேண்டி நின்றனர்.

பாண்டித்துரைத் தேவரவர்கள், புலவர் சண் முகனாரின் ஆற்றலை நன்கு அறிந்தவராதலின் அவரை அழைத்துச் சேதுபதி உயர்நிலைப் பள்ளி வேலையை விட்டுவிடுமாறு வேண்டிக் கொள்ள அவ்வாறே அதனை விடுத்துத் தமிழ்ச் சங்கக் கல்லூரியில் ஆசிரியப்பணி ஏற்றார். அவ் வமயம் தமிழ்ச் சங்கத்திலிருந்து செந்தமிழ், விவேகபாநு, ஞானசாகரம், தமிழகம் முதலிய திங்கள் வெளியீடுகள் வெளியாகிக் கொண்டிருந்

தன. புலவர் சண்முகனர் இவ்வெளியீடுகளில், பல கட்டுரைகளையும், தம் ஆராய்ச்சிக் குறிப்புக் களையும் வெளியிட்டுவந்தார். இக்காலத்திற்றான் புலவர்பெருமான் பலரது கருத்துக்களையும் மறுத்துத் தம் கருத்தைப் பலரறியவெளியிடத் தொடங்கினர். நம் புலவரின் புதியகருத்துச் சென்றவிடமெல்லாம் சிந்தனையைத் தூண்டியது. தமிழ்நாடு முழுமையும் நம் புலவரையும் அவரது திறனையும் அறியும் வாய்ப்புக் கிட்டியது. இவ்வாருக நான்கு ஆண்டுகள் வரை தமிழ்ச்சங்கப் பணியிலீடு பட்டிருந்தார் நம் புலவர்.

"அடைமொழிப் பெயரும் அதன் பொருத்தமும்"

தமிழ்ச்சங்கம் தொடங்கப்பெற்ற காலையில் திருமயிலையிலிருந்து புலவர் ஒருவர் தன்னுடைய பெயராகிய சண்முகம் பிள்ளை யென்ற பெயருடன் வந்திருந்ததை நம் புலவர் அறிந்தார். தமிழ் நாட்டில் இரண்டு புலவர்கள் ஒரே காலத்தில் ஒரே பெயர் கொண்டிருத்தல் பலவித ஐயப்பாடுகட்கு இடந்தரும் எனக்கருதினர் நம்புலவர். ஒருவரால் எழுதப்பெற்ற காவியம் மற்ருெருவர் பெயரால் இயற்றப்பட்டதாகப் பிற்காலத்தும், ஏன்? அதேகாலத்தினுங்கூட எண்ணுதற்கு வழிகோலும் என்று எண்ணினர். ஆதலின் தம்பெய

ரின் முன் தந்தையார் பெயர் காட்டி நிற்கும் வழக்கமான ஓர் எழுத்தைச் சேர்க்காமல், அவர் பெயர்ப்பகுதியாகிய "அ ர ச ன்" என் பதனைச் சேர்த்து 'அரசஞ் சண்முகனார்' எனத் தம்மை உலகுக்கு அறிவித்தார். இவ்வாறாக இரு பெயர்கள் ஒரே காலத்தில் வழங்கியதை வேறு படுத்திக் காட்ட விரும்பிச் செய்த இம்மாற்றம் மற்றோர் வகையில் பொருத்தமாக முடிந்தது. அரசன் என்ற சொல்லுக்குத் தலைவன் என்றும் பொருள் உண்டு. ஆதலின் தமிழ் மொழிக்கு அரசனாகிய சண்முகனார் என இயற்கையாகவே அமைந்தது. எனவே,'அரசன்' என்னும் பட்டம் தமிழன்னை தாமே அவருள்ளத்தில் உதயமாகிக் கொடுத்ததெனக் கொண்டால் மிகையாகாது.

தொல்காப்பியத் தொண்டு

1902-ம் ஆண்டிலிருந்து கல்லூரிப்பணியி லீடுபட்டகாலத்தில், தொல்காப்பிய ஆராய்ச்சியில் நுழைந்தார். தொல்காப்பியம் என்பது தமிழ் நாட்டில் காணக்கூடிய மிகப் பண்டைய நூல். எழுத்து, சொல், பொருள் என முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. தமிழ்மொழியின் அழகு, அமைப்பு, உயர்வு ஆகியவற்றையும், தமிழ் மக்கள் தொன்றுதொட்டு வாழ்ந்த வாழ்க்கையை யும் அதனில் காணலாம். இளம்பூரணர்,

சேனவரையர், நச்சினர்க்கினியர், பேராசிரியர் என்ற நான்கு பேரறிஞர்கள் அந்நூலுக்கு உரை செய்துள்ளனர். தொல்காப்பியத்தில் 1610 நூற்பாக்கள் உள்ளன. இரவுபகலாக இந்நூலில் தங் கருத்தைச் செலுத்தி ஆய்ந்தார். அரசஞ் சண்முகனர், உரையின் பலவிடங்களில் குறை கண்டார். உரைகள் பொருந்தாத இடங்களனைத்தையும்திரட்டினர். தாமே தகுந்தபொருள்எழுதிப் பத்திரிகைகளில் வெளியிட்டார். தொல்காப்பிய வுரைகளுக்கு மறுப்பு எழுதும் துணிவுடைய புலவருண்டோவெனப் பலர் இவரைக் கண்டிக்க முற்பட்டனர். பண்டிதர்களுக்குள் சிலர் இவர் மீது பொருமைகொண்டு இவர் கருத்துக்களை எதிர்த்தனர். அரசஞ் சண்முகனரோ, குன்றின் மேல் ஒளிவிடும் பெருவிளக்கு. இவ்விட்டில் பூச்சிகளைக் கண்டு அஞ்சினரில்லை. "புலவர்களின் புலம்பலுக்கு வாயாப்பும், நுணங்கு மொழிப் புலவர்க்கு வணங்குமொழி விண்ணப்பமும்" என்ற தலைப்பில் தம்மை எதிர்த்தோர் அனைவருக்கும் தக்கவாறு விளக்கம் காட்டி எழுதி அவரது அறியாமையைப் போக்கினர். அதனுடன் நில்லாது தொல்காப்பியப்பாயிரத்திற்குப் புதியதோர் உரையெழுதி "தொல்காப்பியச் சண்முக விருத்தி"யெனப் பெயரிட்டு அதனை

வெளியாக்கினர். அந்நூலைத் தொடர்ந்து "நான் மரபு விருத்தி" என ஒரு நூல் எழுதினர். அரசஞ்சண்முகனரின் அருமை நண்பர் அரித் துவாரமங்கலம் இரகுநாத ராஜாளி என்பவர் அச்சிட உதவினர்.

இவ்வாறே திருக்குறள் என்னும் தமிழ்ப் பெருநூலை ஆராய்ச்சி செய்தார். குறள் வெண் பாக்களில் சில சொற்கள் கருத்துக்கு மாறுபட் டுள்ளன எனக்கண்டு தாம் அச்சொற்கள் எவ் வாறு அமைந்திருத்தல் வேண்டும் என எழுதி யுள்ளார். எடுத்துக்காட்டாக 202-ம் குறட்பாவில்,

"தீயவை தீய பயத்தலால், தீயவை
தீயினு மஞ்சப் படும்"

என்றிருப்பதற்குப் பதிலாக "தீயவே தீய பயத்தலால், தீயவே தீயினும் அஞ்சப்படும்" என எழுதி அவ்வாறெழுதிய காரணத்தையும் பொருத்தத்தையும் விளக்கியுள்ளார். அண்மையில் வெளிவந்துள்ள திருக்குறள் பரிமேலழகர் உரை கூடிய புத்தகத்தில் கடைசிப் பக்கங்களில் அரசஞ் சண்முகனர் பெயரும் இக்குறட்பாவும் அச்சாகி யுள்ளன. 266-ம் குறட்பாவின் கருத்து 'இல்லறத் திற்கும் துறவறத்திற்கும் பொது' வென விளக்கி யுள்ளார். இவ்வாறே பல குறட்பாக்களுக்குப்

புதிய விளக்கம் எழுதியுள்ளார். அவற்றை ஈண்டு விரிக்கவேண்டுவதில்லை. திருக்குறள் முழுமைக்கும் தம் உரை யெழுதி 'திருக்குறள் சண்முகவிருத்தி' யெனப்பெயரிட்டுள்ளார். "திருவள்ளுவர் நேரிசை" யெனவுமொரு நூல் இயற்றினர்.

இவ்வாறு இரவு பகல் ஆராய்ச்சி செய்து பல அரிய தமிழ் நூற்கள் செய்து கொண்டிருந்தார். அவரது புதிய கருத்துக்கள் புலவர் பலரைத் திகைக்கச் செய்தன. பெரும் புலவர் மு. இராகவையங்கார் உட்படக் கணக்கற்ற புலவர்களின் பொருள் விளக்கங்கட்கு மறுப்புக்கள் விடுத்தார். இவைகண்டு இன்று பண்டித மணியாக விளங்கும் திரு. மு. கதிரேசச்செட்டியாரவர்கள், தமிழ்ப்பேராசிரியர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியவர்கள் போன்ற நுண்மாண் நுழைபுல மிக்கோர், பெரும்புலமை, மதிநுட்பம் வாய்ந்தோர்கள் அரசஞ் சண்முகனரைப் பாராட்டியதுடன் அவருடன் பழகி ஆருயிர் நண்பராயினர்.

வாழ்வில் ஒரு வியத்தகு நிகழ்ச்சி:

இடைவிடாத உழைப்பினல் நோய்க்காளானர் புலவர். நோய் முதிர்ந்து எழுந்து நடமாட இயலாதவராகப் படுத்த படுக்கையாயிருந்தார். இரண்டொருவர் கைகொடுத்து எழுந்து வீட்டுக்கு வெளிப்புறத்தில், கொல்லையில் காலை, மாலை

கடன் கழிப்பர். இவ்வாறு இருக்குங்கால், ஒருநாள் பெரியவர் ஒருவர் ஆங்குத் தோன்றி நோய்க்கு மருந்து கொடுப்பதாகவும் தன்னைப் பின் தொடர்ந்து வருமாறும் அழைத்தார். நடக்கவியலாத புலவர் அவர் பின்னே நடந்து சென்று விட்டார். வீட்டிலுள்ளார் எவரும் இதனையறியார். அருகிலுள்ள நாகமலைக்கு அழைத்துச் சென்று ஆங்கிருந்த வோர் மூலிகையைக்காட்டி அதனைப் பறித்து உண்ணுமாறு சொல்லிவிட்டுப் புலவர் குனிந்து பறிக்குமுன் பெரியவர் மறைந்தார். நோயுற்ற காலையில் உடனிருந்து புலவருக்குப் பணியாற்றிய உறவினரில் புலவரின் மருமகனுன இன்றுள்ள திருவாளர் கவிக்குஞ்சரம் என்பாரு மொரு புலவர். காணமற்போன அன்று அவரும் ஆங்கு இருந்தார். படுத்திருந்த புலவரைக் காணுத வீட்டார் நாலாதிசைகளிலும் தேடிக் காண ஆட்கள் விடுத்தனர். பல திக்குகளிலும் தேடிச் சென்ற ஆட்கள் திரும்புமுன்னர் புலவர் பெருமானே நடந்து வந்ததனைக் கண்டு வியப் பெய்தினர். புலவர் வாயிலாகவே நிகழ்ச்சியை யறிந்தனர். அனைவரும் எல்லாம் வல்ல இறைவன் திருவருளை எண்ணிப் புகழ்ந்தனர். நாளுக்கு நாள் உடல் உரம் பெற்றுத் தம்முடைய பழைய நிலையெய்தினுர் நம்புலவர்.

இலங்கை செல்லல்:

1908-ம் ஆண்டிலே யாழ்ப்பாணம் என்னும் இலங்கை நாட்டுக்குச் சென்றார். பத்திரிகைகளின் வாயிலாகப் படித்தறிந்த அறிஞர் சிலர் அரசஞ்சண்முகனாருடன் கடிதமூலம் பழகிவந்தனர். அவர்களிலொருவர் கதிரைவேற்பிள்ளையவர்கள். அவரே புலவர் பெருமானைக் காண வேண்டுமென்னும் ஆவல்கொண்டு, அவருக்கெழுதித் தம் நாட்டுக்கு வரவழைத்தனர். அரசஞ் சண்முகனார் இலங்கை சென்றபோது அம்பலவாணர் என்னும் தமிழ் அன்பர் ஒருவர் இருந்தார். இவர் புலவர் பெருமான் மீது பொறாமையுற்று அவருடன் வாதாட விரும்பினார். புலியின் முன் பூனை நிற்பதுண்டோ? முதல் சந்திப்பிலேயே அரசஞ் சண்முகனாரின் ஆற்றலை அறிந்தார். அன்றிருந்தே புலவரெதிரில் வாராது அருகிலிருந்துகொண்டு குறும்புத்தனமாகப் புலவரைக் குறைத்து எழுதிவந்தார். அதனையறிந்த நம் புலவர்,

> "பலவிதவை தலைமேற் கொண்டொழுகும்
> ஈழத்தம் பலவாணர் தம்
> பாழத்தம்பல பொதிந்த கட்டுரை"

என இரு பொருள்படக் கவியெழுதி அவர் செருக்கையடக்கினார். பின்னர் அம்பலவாணர் தம்

அகங்காரம் அவரை விட்டகன்றது. இரண்டாண்டுகட்கு மேலாகவே அங்கிருந்து தமிழ்ப் பணி செய்து திரும்பினர் நம் புலவர் அரசஞ் சண்முகனர்.

திருவாவடுதுறை ஆதீனத் தொடர்பு:

தமிழ் நாட்டில் சைவ ஆதீனங்கள் மிக்க பழைமையும் பெருமையும் உடையன. அவற்றில் சிறந்தது திருவாவடுதுறை யாதீனம். இச்சைவ நிலையங்களிலே பற்றறத் துறந்த துறவிகள் பலர் இருந்து சைவத்திற்கும், தமிழ்மொழிக்கும் ஒருங்கே தொண்டாற்றி வந்துள்ளனர். அவர்களுள் நம்புலவர் பெருமான் வாழ்ந்தநாளில் இருந்த அந்நிலயத்தின் தலைவர் தமிழ்ப்பற்று மிக்குடையவர். தம்முடைய நிலயத்திலே 'தமிழ்க் கலை மாநாடு ஒன்று நடத்தினர். பல்வேறு இடங்களில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் ஆங்கு வரவழைக்கப்பட்டனர். மாநாடு மூன்று நாட்களாக நடைபெற்றது. சொற்பொழிவுகளும், சொற்போர்களும் நிகழ்ந்தன. அவற்றில் தலைமைப்பங்கு கொண்ட ஐவருக்கு ஆதீனத்தலைவர் மாநாட்டின் இறுதியிலே, புலவர்கள் கூடியுள்ள பேரவையிலே பரிசுகள் வழங்கிப் பெருமைப்படுத்தினர். அவ் வைவரில் அரசஞ்சண்முகனரும் ஒருவர். நூறு வெண்பொற்காசுகளும், விலையுயர்ந்த

பீதாம்பரப்பட்டும் அப்பரிசுப்பொருள்கள் ஆகும். அப்பட்டாடையை ஆதீனத்தலைவரவர்கள்கையாலேயே மாலையாக அணிவிக்கப்பெற்றதை அந் நாளில் பெருமதிப்பாக அனைவரும் எண்ணினர்.

இவ்வாறு உயர்ந்த பரிசில் பெற்றுத் தம்மூர் செல்ல ஒரு குதிரைவண்டியிலேறிப் புகைவண்டி நிலயம் சென்று கொண்டிருந்தார் புலவர் அரசஞ் சண்முகனர். அவ்வண்டியில் அவருடன் வேறிருவரும் வீற்றிருந்தனர். வண்டி ஓடிக்கொண்டிருக்கையில் ஓர் ஏழைப்பெண் உடுத்தச் சரியான உடையில்லாமல் தெருவழியே சென்று கொண்டிருந்ததனைக் கண்டார் புலவர். பலவிடங்களில் கிழிந்து பாதி உடம்புக்கு மேலாக வெளியில் தெரியுமாறு இருந்தமையால் அவ்வேழைப் பெண் மானத்தை மறைக்கப் பட்டபாட்டைப் புலவர் உணர்ந்தார். புலவருக்கு உள்ளம் உருகியது. உடனே வண்டியை நிறுத்தி அப் பெண்ணை அருகே அழைத்துத் தம் மீதிருந்த விலையுயர்ந்த பீதாம்பரத்தை அவள் கையில் கொடுத்து உடுத்திக் கொள்ளச் சொல்லிச் சிறிது பணத்தையும் அவள் கையில் கொடுத்தார்.

'வறியார்க் கொன்றீவதே ஈகை'

எதிர் பாராமல் திடீரென இச்செல்வ நிலையடைந்த பெண், திடுக்கிட்டு இவரையே தெய்வ

மெனக்கருதினுள். நன்றி கூறவாயெடுத்தாள். அதற்கு முன்னரே குதிரையைத் தட்டி ஓட்ட வண்டிக்காரனுக்கு ஆணையிட்டார் புலவர். அவ்வாறே வண்டியும் விரைந்து அப்பெண்ணினது கண்ணீர்ததும்பும் கண்ணினின்றும் மறைந்தது. ஊர், பெயர் தெரியாத ஓர் ஏழைக்குத் தனக்குக் கிடைத்த பேரிடத்துப் பரிசிலேயே கொடுத்து மானங்காக்க உதவி செய்தார் என்ருல், இந்நாட்டு மக்களை எவ்வளவாய்க் கருதியுள்ளார் புலவர் பெருமான் என்பது அறியலாம். தமிழர் நிலை தாழ்வடையத் தாங்காத அவர் உளப் பண்பை எவர்தாம் எடுத்தியம்பக்கூடும்! 'செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் மாற்றலரிது' என்னும் குறட்பாவை நன்கறிந்தவரன்ரோ நம்புலவர். திருவாவடுதுறை ஆதீனத் தலைவருக்கு இச்செயல் எவ்வாருே எட்டியது. தாம் சிறப்புக்காக் கொடுத்த வெகுமதிப் பொருளைப் பெரிதென்றும் பாராது யாரோ ஒரு பெண்ணுக்கு அளித்துச் சென்றதனை, ஆதீனத்தை அசட்டை செய்ததாகக் கருதினர். இவ்வாருக ஆதீனத் தலைவர் மனம், தம் செய்கையால் புண்பட்டதென அறிந்த, நம் அரசஞ் சண்முகனர் இரண்டு திங்களுக்குப்பின்பு மறுபடியும் ஆதீனத் தலைவரிடம் அணுகினர். அச்செயலை மறந்

திருந்த ஆதீனத்தலைவர் புலவரைக் கண்டு அளவளாவிக்கொண்டிருந்தார். அவ்வமயம் தாமே பீதாம்பரப்பட்டுப் பேச்செடுத்துத் தாம் செய்த செயலைச் சொல்லி, அச்செயல் செய்யவேண்டிய அளவுக்கு ஏற்பட்ட சூழ்நிலையையும் விளக்கி, ஆதீனத்தை என்றென்றும் அசட்டை பண்ணத் தமக்கு எண்ணமில்லையென்றும் கூறினர். அதைக்கேட்ட ஆதீனத் தலைவர் அவரது அஞ்சாமைக்குமெச்சி, மீண்டுமொரு பீதாம்பரப்பட்டினைப் புலவருக்களித்துப், பரிசிற் பொருளை எவருக்கும் ஈதல் கூடாதென அன்புரை கூறி, ஆதீனத்தில் சில காலம் நிறுத்திப் பின்னர் அனுப்பி வைத்தார்.

வாழ்வில் சில நிகழ்ச்சிகள்:

மதுரையின் கிழக்கிலே ஏறக்குறைய இரண்டு கல் தொலைவில் மாரியம்மன் தெப்பக்குளம் ஒன்றுண்டு. அங்கே பல தடவைகளில் புலவர் பெருமான் சென்று பொழுது போக்குவது வழக்கம். ஒரு நாள் அவ்வாறு சென்ற போது, குளத்தின் படிக்கரையில் இறங்கினர். அதிலிருந்தபாசத்தால் வழுக்குற்றுத் தண்ணீருக்குள் விழுந்து விட்டார். உதவிக்கு ஒருவருமில்லாத அந்நேரத்தில்

உத்தமபாளையம் உயர்திருவாளர் **M. T.** சுப்பிரமணிய முதலியாரவர்கள் (திரு. **P. T.** இராசனின் பெரியதந்தை) எங்கிருந்தோ அவ்வேளை அங்கு வந்து, இந்நிலைகண்டு ஓடோடிச் சென்று கைகொடுத்துத் தூக்கிக் கரையேற்றினர்.

கரையேறி உயிர் பெற்ற உத்தமப் புலவர் முதலியாரவர்களை என்றென்றும் மறவாமல் தம்முடைய நூலில் 'உயிர்காத்த உபகாரி' என வெழுதிப் புகழ்ந்துள்ளார்.

முதலியாருக்கும் புலவருக்கும் நட்பு வளர்ந்தது. அடிக்கடி இருவரும் உலாவச் செல்லுதல் வழக்கம். ஒருநாள் கதிரவன் கடுமையாய்க் காய்ந்தது கண்டு புலவரவர்களைப் பார்த்து "முன்னாளிலெல்லாம் புலவர்கள் பாட்டுப்பாடி பல அரிய செயல்கள் செய்து காட்டியுள்ளனரே, தாங்களும் ஒரு பாட்டுப்பாடி வெப்பத்தின் தன்மையினை மாற்ற வேண்டுமென வேண்டினர். அதனைக் கேட்ட புலவர் 'போய்வருமளவும்பொழிமுகிலே' என்ற ஈற்றடிகொண்ட பாட்டொன்றுபாடி இறைவனை வேண்டினர். உடனே சிறிது தூற்றல் உண்டாயிற்று. இந்நிகழ்ச்சியைக் கண்டு வியப்பெய்திய முதலியாரவர்கள் புலவரின் பக்தித் திறனை

யும் உன்னத ஒழுக்க நிலையையும் பலருக்கும் புகழ்ந்து சொல்லி மகிழ்ந்தார்.

அரசஞ்சண்முகனர் வாழ்ந்த காலமெல்லாம் தமிழ் லெக்சிகன் (Lexicon) என்னும் அகராதி ஆக்குகின்ற கலைக்கூடம் மதுரையிலே இருந்து வந்தது. ஆங்கிலப் பாதிரியாரொருவர் (Rev. Chandler) அப்பணியினைக் கவனித்து வந்தார். அரசஞ்சண்முகனரையே அதன் ஆசிரியராக அமர்த்தி திங்கள்தோறும் ஒரு சிறு தொகை கொடுத்து அப்பணியை அவர் மூலம் செய்துவந்தார். அரசஞ்சண்முகனர் மறைவுக்குப் பின்னர்தான் அக்கலைக்கூடம் மதுரையை விட்டுப் பெயர்த்துச் சென்னைக்குக் கொண்டு போகப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாருகப் புகழோங்க வாழ்வு நடத்தி, நாட்டில் புதுமைக் கருத்தைப் புகுத்தி, தமிழன்னைக்குத் தொண்டாற்றிய தன்னேரில்லாத் தமிழன், வள்ளல் அரசஞ்சண்முகனர் தம் 47-ம் வயதில் 1915-ம் ஆண்டு சனவரி 10-ம் நாள் இவ்வுலக வாழ்வினின்றும் விடைபெற்றுப் புகழுலகம் புகுந்தார். அவர் புகழ் நம்மிடையே என்றும் நின்று நிலவுவதாக!

எழுதிய நூல்கள்:

அச்சானவை

1. மாலைமாற்று மாலை
2. இன்னிசை இரு நூறு
3. மதுரை மீனாட்சியம்மை சந்தத் திருவடி மாலை
4. திருவடிப்பத்து
5. சிதம்பர விநாயகர் மாலை
6. திருவள்ளுவர் நேரிசை
7. திருக்குறள் சண்முக விருத்தி
8. தொல்காப்பியச் சண்முக விருத்தி

இன்னும் அச்சியற்றப் பெறுதவை:

1. ஏகபாத நூற்றந்தாதி
2. முருகக்கடவுள் கலம்பகம்
3. பஞ்சதந்திர வெண்பா
4. மதுரைச் சிலேடை
5. நவமணிக் காரிகை நிகண்டு
6. நுண்பொருட் கோவை
7. இசை நுணுக்கச் சிற்றுரை
8. ஆகுபெயர் அன்மொழித்தொகை ஆராய்ச்சி

விவேகாநந்தா அச்சகம், மதுரை:—53.

SAW. GANESAN
KARAIKUDI. S. I. R.

மணி பதிப்பகம்
மதுரை.

TAMIL THONDAR

BY

Vidvan. V. P. NATARAJAN

Price As. 14